529

# தரம் 8









# வரலாறு

புதிய பாடத்திட்டம் 2017

சிறுகுறிப்பேடு

பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 900
Acc No 529

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## புதிய பாடத்திட்டம் 2017

Acc No 529
Class No:

# தரம் - 08

### வினாவிடைகள்
### கணிப்பீடுகள்
### வரலாற்று விளக்கப்படங்கள்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 0112422321, 0112435713
மின்னஞ்சல் :
Poobalasingham202@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01
# இலங்கையின் பாரம்பரிய தொழில்நுட்பமும் கலைகளும்

**01. பாரம்பரிய தொழில்நுட்பம் என்றால் என்ன?**

➢. தலைமுறை தலைமுறையாக வளர்ச்சி அடைந்து வந்த தொழில்நுட்பத்தின் சில அம்சங்கள் எமது நாட்டுக்கே உரித்தானவை யாகும். ஆகையால் அவற்றை பாரம்பரிய தொழில்நுட்பம் என்கின்றோம்.

**02. நீரியல் தொழில்நுட்பம் என எவற்றைக் குறிப்பிடலாம்?**

➢. குளம் , கால்வாய் , தடாகம் என்பன நீருடன் தொடர்புபட்டவையாகும். அவற்றில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பமுறையை நீரியல் தொழில்நுட்பம் எனப் பொதுவாகக் குறிப்பிடலாம்.

**03. குளங்களை அமைக்கவேண்டியதன் அவசியத்தை எழுதுக.**

➢. உலர்வலயப் பிரதேசங்களில்குடியிருப் புக்களைஅமைத்துக் கொண்டமை.

➢. வருடத்தில் ஒரு பருவத்திற்கு மாத்திரம் மழையைப் பெறும் பிரதேசமாக உள்ளமை.

➢. ஆறுகள் வற்றிப்போனமையும், ஆவியாக்கம் அதிகளவில் நிகழ்வதுமாகும்

➢. பயிர்ச்செய்கைக்கும் ,பாவனைக்கும் தேவையான நீரைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டிய தேவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டி இருந்தமையும் அதற்கு நீர் தேவையாக இருந்தமையும்.

**04. சிறிய குளங்களைப் பற்றிக் குறிப்பிடுக.**

➢. சிற்றருவியை அல்லது ஓடையை இடைமறித்துச் சிற்றணை ஒன்றைக் கட்டி நீரைச் சேமித்துக்கொண்டமையே சிறிய குளங்களின் ஆரம்பம் எனக் கொள்ளலாம்.

➢. கிராமத் தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் மக்கள் தமக்கு தேவையானகுளங்களை அமைத்தனர்.இவையே கிராமக்குளங்கள் என அழைக்கப்பட்டன.

➢. குடும்பத்தவர் , ஊர்மக்கள் ஆகிய எல்லோரினதும் உழைப்பினாலேயே இக்குளங்கள் உருவாகின.

**05. கி.மு 3ம் நூற்றாண்டளவில் அரசர்களின் தலையீட்டுடன் குளங்கள் ஆரம்பிக்கப் - பட்டமைக்கான எடுத்துக்காட்டுக்களைத் தருக.**

➢. பண்டுகாபய மன்னன் காலத்தில் கட்டப்பட்ட ஜயவாவி , அபயவாவி (பசவக்குளம்) காமினி வாவி என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

➢. தேவநம்பியதீச மன்னனால் அமைக்கப்பட்ட திஸ்ஸவாவியையும் குறிப்பிடமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. "பெருங்குளம் கட்டும் பணியை ஆரம்பித்தவர் வசப மன்னராவார்" பெருங்குளங்களை அமைத்த மன்னர்களைக் குறிப்பிட்டு அவர்கள் அமைத்த குளங்களையும் குறிப்பிடுக.

- வசபன் (கி.பி 67-111) - மயென்குளம் (மகாவிலாச்சிய) , மானிக்விட்டி அல்லது மகாநிக்கவட்டி(மானன்கட்டிய குளம்)
- மகாசேனன் (கி.பி 274-301) - மணிகிரவாவி (மின்னேரியா) , ஜல்லுர (குருளுவாவி) காணுவாவி(மகாகணதரவாவி)
- தாதுசேனன் (கி.பி 455-473) - கலாஓயா, மகாதத்தவாவி ,பாதுலகவாவி

07.(அ)முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் பிரதான கொள்கை எதுவாகவிருந்தது?.

(ஆ)அவன் அமைத்த குளத்தின் பெயர்யாது?

- (அ) "இந்நாட்டில் மழையினால் பெறப்படும் ஒரு துளி நீரையேனும் கடலில் கலக்க விடமாட்டேன் " என்பது.
- (ஆ) பராக்கிரம சமுத்திரம்.

08. பாரிய குளங்களால் இலங்கையர் அடைந்த நன்மைகளைக் குறிப்பிடுக.

- பெருங்குளங்களில் அதிகளவு நீரைச் சேமித்து வைத்துக் கொள்ள முடிந்தமையால் நீண்ட வரட்சியின்போதும் தண்ணீர்ப் பற்றாக்குறையை மட்டுப்படுத்த முடிந்தமை.
- பெரிய குளங்களிலிருந்து கால்வாய்கள் மூலம் சிறிய குளங்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்திக்கொள்ள முடிந்தமை.
- ➢. பெருங்குளங்களை அமைத்ததோடு நீரைக்கொண்டு செல்வதற்காக நீண்ட கால்வாய்களை அமைக்கும் தொழினுட்பத் திறமையும் வளர்ச்சியுற்றமை.
- ➢. விவசாய நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள முடிந்தமை.

**09. பாரிய குளங்களைக் கட்டும்போது எதிர்நோக்கிய சவால்களைத் தருக.**

- ➢. பாரிய குளங்களைக்கட்டும்போது முன்னனுபவம், முறையான திட்டமிடல் உயர்ந்த தரத்தைப் பேணுதல் ஒரு சிக்கலான நடவடிக்கையாக இருந்தமை.
- ➢. ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான பெரும் நீர் கொள்ளவையும் தாக்குப்பிடிக்கக் கூடிய 20-30 அடி உயரமான அணைக்கட்டுக்கள் அமைக்க வேண்டி இருந்தமை.
- ➢. குளத்திற்கு அண்மையில் மக்கள் வாழ்வுடன் பேரளவிலான நிலபுலங்களும் காணப்படுவதால்,உயர்தரத்திலான நீரின் அதிக அழுத்தத்திளை தாங்கக்கூடிய தரத்திலான அணைக்கட்டு அமைக்கப்பட வேண்டியிருந்தமை.
- ➢. நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்கும்போது அருவியிலோ, நதியிலோ மிகப் பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியிருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. இடத்தைத் தெரிவு செய்கையில் நிலத்தின் உயரம், இருபக்க மலைகளினதும் தன்மை ஏனைய குளங்களுடன் கால்வாய்களின் இணைப்பை ஏற்படுத்தும் விதம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியிருந்தமை.
- ➢. தேவையான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமை.

**10. குளம் ஒன்றின் முக்கிய பகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றின் பணிகளைத் தருக.**

(i) **குளக்கட்டு** - குளத்தின் நீர்கொள்ளும் திறனைப் பாதுகாப்பது.

(ii) **மதகு** - அதிக அழுத்தத்துடன் குளத்தில் இருக்கும் நீரை அணைக்கட்டின் ஊடாக கால்வாய்க்கு விடுவிப்பது.

(iii) **ஈரக்கலிங்கல்** -குளத்து நீர் முழுவதையும் பள்ளத்தாக்கிற்கு விடுவித்துவிட விடவும். குளத்தில் படிந்துள்ள சேற்றை அகற்றுவதற்கும் இது பயன்படும்.

(iv) **உயர்கலிங்கல்** - குளத்தின் நீர்மட்டம் கூடியிருக்கும் போது நீரை வழங்குவது. சிறு குளங்களில் கலிங்கல்தொட்டி இன்றி கலிங்கல்மூலமே நீரைவெளியேற்ற முடியும்.

(v) **கலிங்கல் தொட்டி** - குளத்திலிருந்து நீரை வெளியேற்றும் பணியினைப் புரிகிறது. குளக்கட்டு பாதிக்கப்படாமல் பாதுகாப்பது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vi) **அலைதாங்கி** -குளக்கட்டு நீரினால் அரிக்கப்படுவதை தடுப்பது.குளக்கட்டு அரிக்கப்படுவதை தடுக்க உட்புறத்தில் பாரிய கருங்கற்களைப் பரப்பி இது அமைக்கப்படுகிறது.

(vii)**உள்வான்கதவு** - இன்னொரு நீர் மூலாதாரத்தில் இருந்து குளமொன்றுக்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும்.

(viii)**வெளிவான்கதவு** - மழைக்காலத்தில் குளத்தில் சேரும்மேலதிகநீரை வெளியேற்ற உதவும்.

**11. இருவகை அணைக்கட்டுக்களையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.**

1. **தற்காலிக அணைக்கட்டு** - அருவிகள் , ஆறுகள்என்பவற்றின் நீரோட்ட வேகம் குறைந்த இடத்தில் மரத்தூண்களை நாட்டி கல் மண் என்பவற்றை இட்டு அமைக்கப்படும் அணைக்கட்டுக்கள் ஆகும்.இதன் மூலம் ஒரு போகத்திற்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதே நோக்கமாகும். அடுத்து வரும் மழைக்காலத்தில் சிதைந்து போய்விடும்.

2. **நிரந்தர அணைக்கட்டு** -
நீரின் அமுக்கத்திற்கும் அரிப்பிற்கும் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் கற்தூண்களைக் கொண்டும் அமைக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம் ➢. மல்வத்து ஓயாவிற்கு குறுக்காக அமைக்கப்பட்ட "கல்கடவெல"அணைக்கட்டு

➢. தெதுறு ஓயாவிற்கு குறுக்காக வாரிப்பொலவில் அமைக்கப்பட்ட ரிதிபெந்தி அணைக்கட்டு.

## 12. கால்வாய்கள் அமைக்கப்படுவதற்கான தேவைகள் எவை?

➢. குளங்களில் இருந்தும் நீர்த்தேக்கங்களில் இருந்தும் விளைநிலங்களுக்கு நீர் கொண்டு செல்லல்.

➢. நீர்த்தேக்கத்தில் இருந்து குளத்திற்கோ, குளத்தொகுதிக்கோ நீரைக் கொண்டு செல்லல்

➢. குளத்தில்இருந்து இன்னொரு குளத்திற்கோ பல குளங்களுக்கோ நீரைக்கொண்டு செல்லல்

➢. நிலத்தின் ஈரத்தன்மையைப் பேணல்.

➢. பொய்கைகளுக்கு நீர் வழங்கல்.

## 13. கால்வாய்கள் அமைக்கும்போது எதிர்நோக்கிய சவால்களைக் குறிப்பிடுக?

➢. நிலத்தின் தோற்ற வேறுபாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தமை.

➢. புவியின் சாய்வு தொடர்பாக மிகச் சரியான அளவை தெரிந்துகொள்ள வேண்டியிருந்தமை

➢. நீண்ட கால்வாய்களை அமைக்கும்போது நிலத்தை அகழ்ந்து ,கால்வாயின் அகலம் ,ஆழம் என்பவற்றைப் பொருத்தமாகக் கையாளல்.

➢. மென்மையான மண்படை காணப்படும் இடங்களில் கிடையாகக் கற்களைப்பரப்பி அது அரிப்புக்குள்ளாவதைத் தடுத்தல் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மழைக்காலத்தில் கால்வாயில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு நீர்வெளியேறும் போது கால்வாயை அரித்துச் செல்வதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

**14. கால்வாய்கள் அமைத்தல் தொடர்பான தொழினுட்பங்களைத் தருக.**

➢. கால்வாயில் நீர்ப்பெருக்கு ஏற்படும் இடங்களில் அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கற்களிலான வான் கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

➢. வயல்களுக்கு நீரை விடுவிக்கும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மதகுகள் கருங்கற்களால் உருவாக்கப்பட்டு இருந்தன.

➢. நிலத்தின் சாய்வைப் பயன்படுத்தி நீண்ட தூரத்திற்கு கால்வாய்கள் அமைக்கப்பட்டன.

➢. ஜயகங்கையின் முதல்17 மைல்கள் வரை ஒவ்வொருமைல்தூரத்திற்கும் ஒருஅங்குலம் சாய்வில் அதனை அமைத்துள்ளனர்.

➢. சுரங்கத்தினூடாக ரன்மசுப்பூங்காவுக்கு நீரைக்கொண்டு சென்றமை.

**15. பொய்கை என்றால் என்ன?**

மனிதர்களுடைய பல்வேறு தேவைகளுக்காக நீரைச் சேகரித்து வைத்துக்கொள்வதற்கு நிலத்தை அகழ்ந்து அமைத்துக்கொள்ளும் ஆக்கம் பொய்கை எனப்படும்.

**16. பொய்கை எவ்வாறு அமைக்கப்பட்டது?**

நிலத்தை அகழ்ந்து உட்பகுதிச் சுவர்களுக்கு தடுப்பு அமைத்து நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. மகாவம்சத்தில் பொய்கை பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன அவற்றினுள் இரண்டினைத் தருக.**

➢. விஜயன் இந்நாட்டில் கால்பதிக்கும் போது குவேனி பொய்கை ஒன்றின் அருகில் அமர்ந்து நூல் நூற்றுக் கொண்டிருந்தாள் எனவும்.

➢. வசபமன்னன் நகரத்தை அழகுபடுத்துவதற்காக பல பொய்கைகளை அமைத்ததாகவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

**18. பொய்கைகள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் எவையென எழுதுக.**

**(i) நீர்ப்பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டது**

➢.குளிப்பதற்கும் , குடிப்பதற்கும் நீரைச் சேகரித்துக் கொள்வதற்கும் வெவ்வேறு பொய்கைகள் அமைக்கப்பட்டிருந்தன.

◈ குளிப்பதற்கு அமைக்கப்பட்ட பொய்கை-
**உ + ம்** :- அபயகிரிப்பொய்கை

◈ நீராடுவதற்கு அமைக்கப்பட்ட பொய்கை
**உ + ம்** :- ரன்மசுப் பூங்காப் பொய்கை

**(ii) மழைநீரை முறையாகச் சேகரிப்பதற்காக அமைக்கப்பட்டது.**

➢. மழைக்காலங்களில் இடத்துக்கிடம் நீர் தேங்கி ஏற்படும் சூழல் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காக சுரங்கம் அல்லது கால்வாய்கள் மூலம் அந்நீர் பொய்கைகளுக்குப் பாய்ச்சப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம்:-அபயகிரி தாதுகோபத்தின் மீதுபொழியும் மழைநீர் பீலிகள் சுரங்கக் கால்வாய்கள் மூலம் பொய்கையில் சேர்ந்துள்ளது.

**(iii) அழகுக்காக அமைக்கப்பட்டது.**

➤. அநுராதபுரம் ரன்மசுப் பூங்காவின் பொய்கையைப்போன்று பொலன்னறுவையில் குமாரப் பொய்கை தாமரைப்பொய்கை என்பன அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**(iv) சூழலைக் குளிர்மையாக்குவதற்கு அமைக்கப்பட்டுள்ளது.**

➤. ஆராமைகளில் வாழும் பிக்குகள் குளிரான சூழலில் தியானம் புரிவதற்காக பொய்கைகள் அமைக்கப்பட்டன.

உ + ம் :- அபயகிரி விகாரை நிலப்பரப்பில் 65 பொய்கைகள் உள்ளன.

➤. ரஜகலைத் தொல்பொருள் பிரதேசத்தில் 40 க்கும் மேற்பட்ட பொய்கைகள் அமைக்கப்பட்டிருந்ததாக அறியப்பட்டது.

**19. உலர் வலயப்பிரதேசங்களில் பொய்கைகள் அமைத்தலில்காணப்பட்ட தொழினுட்பங்களைக் குறிப்பிடுக.**

➤. பொய்கைக்கான இடத்தைத் தெரிவு செய்தல்.

◈ நீரைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ கற்பாறைகளின் மீது கல் அணைகளைக் கட்டுவதன்மூலம் மழைநீரைச் சேமித்துக் கொள்ளல்.

◈ நீர் மூலங்களில் இருந்தோ சுரங்கவழியிலோ கால்வாய் மூலமோ நீரைப் பெற்றுக்கொள்ளல்.

➢. பொய்கைகளில் நீர் அசுத்தம் அடைவதை நீக்கப்பயன்படுத்திய முறைகள்

◈ சிலபொய்கைகளில் நீர் அசுத்தம் அடையும்போது அந்நீர் நிலத்துக்கு அடியில் கால்வாய் மூலம் அகற்றுவதற்கு பொய்கையின் அடிப்பாகத்தில் துளை இடப்பட்டு சுரங்க வழிகள் உருவாக்கப் பட்டுள்ளன .

உ +ம் :- குட்டம்பொய்கை , ரன்மசுஉ யனப் பொய்கை.

➢. பொய்கையின் ஓரங்கள் இடிந்துவிழாமல் கல்லணைகளால் தடுப்புக்கள் அமைக்கப் பட்டிருத்தல்.

➢. பொய்கையில் நீர் உறிஞ்சப்படுதலை தடுப்பதற்கு தடுப்புக்கற்கள் உறுதியான சாந்தினால் ஒன்றுடன் ஒன்று பொருத்தப் பட்டிருத்தல்.

➢. எந்த மட்டத்திலான அளவிலும் நீரினுள் இறங்குவதற்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளது.

➢. பொய்கைகளுக்கு வெளியில் இருந்து வரும் நீரை வடிகட்டி விடுதல்.

➢. வெளியில் பெய்யும் மழைநீர் பொய்கையினுள் பாய்வதைத் தடுப்பதற்கு கற்சுவர் நிலமட்டத்தில் இருந்து உயரமாக அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. நீர்ப்பூங்கா / நந்தவனம் என்றால் என்ன?**

மரஞ்செடிகளை நட்டு ஓய்வெடுப்பதற்காகவோ, நீர் விளையாட்டுக்காகவோ பொருத்தமானதாக முறைப்படி அமைக்கப்பட்ட விசேட இடமாகும்.

**21. மூத்த சிவ மன்னரால் அமைக்கப்பட்ட நந்தவனத்திற்கு மகாமேகவனம் எனப் பெயர் பெற்றதேன்?**

➢. நந்தவனத்துக்கு நிலத்தை தயார் செய்த வேளையில் அடைமழைபெய்ததால் மகா மேகவனம் எனப் பெயர் பெற்றது.-

- மகாவம்சம் -

**22. தேவநம்பியதீசன் மகிந்த தேரருக்கும் அவரது குழுவினருக்கும் வழங்கிய இம் மகா மேகவனம் "ஜோதி வனம்" என்று ஏன் குறிப்பிடப்பட்டது?.**

➢. மகிந்ததேரர் அங்கிருந்து தர்ம உபதேசம் செய்தபடியால் அது புத்தசாசனம் துலங்கிய இடம் என்ற பொருளிலேயே ஜோதிவனம் எனப்பட்டது.

**23. புராதன காலத்தில் பூங்காக்களை அமைத்த மன்னர்களைக் குறிப்பிடுக?**

➢. குட்டகண்ண திஸ்ஸமன்னன் - பத்மஸ்வர

➢. வசபன்

➢. கோதபாய

➢. முதலாம் காசியப்பன்

➢. 1ம் அக்போ

➢. 1ம் பராக்கிரமபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஆராமைப் பூங்காக்கள் பெரும்பான்மையாக அமைக்கப்பட்ட இடங்களைக் குறிப்பிடுக.
   - ➢. அநுராதபுர மகாவிகாரை
   - ➢. அபயகிரி விகாரை
   - ➢. ஜேதவனராம விகாரை என்பவற்றை அண்டி
25. பூங்காக்களுக்கு நீர்வசதியை ஏற்படுத்திக் கொடுத்து பொய்கைகளை அமைத்து அழகுடன் உருவாக்கப்பட்ட நீர்ப்பூங்காக்களுக்கு உதாரணம் தருக.
   - ➢. ரன்மசுப்பூங்கா
   - ➢. சிகிரியா நீர்ப்பூங்கா
26. அரசர்களின் பாவனைக்காக அமைக்கப்பட்ட ரன்மசுப் பூங்காவின் அமைப்பில் பிரயோகிக்கப்பட்ட தொழில்நுட்பங்களைத் தருக?.
   - ➢. நிலத்தின் சாய்வான தன்மையும் திசாவாவிக் கரையின் அமைதியான சூழலும் கருத்தில் கொண்டு பூங்கா திட்டமிடப்பட்டுள்ளது.
   - ➢. திஸ்ஸவாவியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நீர் பூங்கா வழியே பாய்ந்து ஓட குழாய்த் தொகுதி அமைக்கப்பட்டிருந்தது.
   - ➢. திறந்த வெளிவீடுகள் , மண்டபங்கள் , குளியலறைகள் , சாய்ந்து அமர கற்படுக்கைகள் அமைக்கப்பட்டிருந்தமை.
27. சிகிரியா நீர்ப்பூங்கா பற்றிய குறிப்புக்களைத் தருக.
   - ➢. தென் ஆசியாவிலுள்ள மிகவும் பழமை வாய்ந்த நீர்ப்பூங்காக்களுள் சீகிரிய நீர்ப்பூங்கா குறிப்பிடத்தக்கதாகும்.
   - ➢. கி.பி 5ம் நூற்றாண்டுக்குரிய இந் நீர்ப்பூங்கா காடடர்ந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. எச்.சி.பி.பெல்,செனரத் பரணவிதாரண ஆகிய தொல்பொருள் ஆய்வாளர்களால் இது வெளிக்கொணரப்பட்டது.

➢. சிகிரியாக் குன்றை மையமாகக் கொண்டு மேற்குப்பக்கமாகப் பிரயாணம் செய்யும் பிரதான பாதைக்கு சமாந்தரமாக அவ்வழியின் இரு மருங்கிலும் இந்நீர்ப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

**28. சிகிரியா நீர்ப்பூங்காவின் தொழில்நுட்பத்தின் சிறப்பினைத் தருக.**

➢. உயர்பிரதேசத்தில் இருந்து கால்வாய்த் தொகுதி ஒன்றின் ஊடாக கீழே பாய்ந்து வரும் நீர் பொருத்தப்பட்டுள்ள வட்ட வடிவத் துளையிடப்பட்ட கற்களின் ஊடாக அதிக அழுத்தத்துடன் வெளியேறும் போது பூம்புனலாகப் பரிணமிக்கிறது.

➢. இயற்கையாக ஏற்படும் அழுத்தம் காரணமாகவே இத்துளையால் நீர் பீறிட்டு உயரே பாய்கிறது. இச் செயற்பாட்டை பெரும் மழைக்காலங்களில் இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

**29. நீர்ப்பூங்காக்களின் சிறப்பம்சங்களை எழுதுக.**

➢. நிலப்பிரதேசத்தின் இயல்புக்கு அமையவும், சூழலுக்குப் பொருந்தும் வகையில் பூங்கா திட்டமிடப்பட்டிருத்தல்.

➢. திட்டமிடப்பட்ட அமைப்பிலான வீதித் தொகுதி ஒன்று பூங்காவினுள் நிர்மாணிக்கப் பட்டிருந்தமை.

➢. திட்டமிடப்பட்ட அமைப்பினைவீதித் தொகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று பூங்காவினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை.

- ➢. கால்வாய் , பொய்கை, பூம்புனல் என்பவற்றை அமைத்து அழகுபடுத்தியமை.
- ➢. திறந்தவெளி வீடுகள் ,மண்டபங்கள் , ஓய்விடங்கள் ஆகியவற்றை அமைத்து மரஞ்செடி கொடிகளால் மனோரம்மியமான சூழலை ஏற்படுத்தியுள்ளமை.
- ➢. பூங்கா நிர்வாகிகளினால் முறையாகப் பராமரிக்கப்பட்டமை.

**30. புராதன காலத்தில் இருந்தே களிமண் கைத்தொழிலில் ஈடுபட்டதற்கான காரணங்கள் யாவை ?**

- ➢. இலகுவாகக் கிடைக்கக் கூடியதாக இருந்தமை.
- ➢. இலகுவாகக் கையாளக் கூடியதான மூலப்பொருளாக இருந்தமை.
- ➢. இதனையொத்த மூலப்பொருட்கள் இல்லாமை.

**31. புராதன காலத்தில் செய்த மட்பாண்டங்களை எவ்வாறு உறுதியடையச் செய்தனர்?**

- ➢. வெயிலில் காயவைத்து , பின்னர் நெருப்பில் சுடுவதன் மூலம்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa

**32. புராதன காலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மட்பாண்டங்கள் எவை?**

- ➢. சட்டி , பானை , பீங்கான் , கோப்பை.
- ➢. நீரைச் சேகரித்து வைக்கக் கூடிய பாண்டங்கள் .
- ➢. பூச்சாடிகள் .

Class No: 900
Acc No 529



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. மட்பாண்ட கைத்தொழிலோடு வளர்ச்சி பெற்று வந்த ஏனைய தொழினுட்பங்களாக விளங்குபவை யாவை ?.

➢. மட்பாண்டங்களிற்கு வர்ணம் பூசுதல்.

➢. உருவங்கள் வரைதல்.

➢. பூச்சாடிகள் அலங்காரங்கள் செய்து அழகுபடுத்தல்.

34. மட்பாண்ட உற்பத்திக்கலையில் பாரிய மாற்றத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்த கண்டுபிடிப்பு எது ?

➢. வனைதல் சில்லு

35. வனைதல் சில்லு என்றால் என்ன ?

➢. தரையிலோ அல்லது வேறு ஒரு பொருளின் மீதோ வைத்து கழற்றக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள வட்ட வடிவிலான பலகையிலான கருவியாகும்.

36. வனைதற் சில்லினது செயற்பாடு பற்றிக் குறிப்பிடுக.

➢. வனைதற் சில்லின் மீது களிமண்ணை வைத்து அப்பலகையைச் சுழற்றுவதன் மூலம் சுழற்சி வேகத்திற்கும் கையினால் உருவாக்கப்படும் வடிவத்திற்கு ஏற்ப சிறந்த முடிவுப்பொருள் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

37. மட்பாண்ட உற்பத்தியின் படிமுறை நடவடிக்கைகளைத் தருக?.

➢. பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்தல்.

➢. களிமண்ணைப் பதப்படுத்துதல்.

➢. வனைதற் சில்லில் வைத்து உருவமைத்து வடிவமைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. காயவைத்து , சுடவைத்தல்.

**38. இந்தியாவில் காணப்பட்ட அக்கால மட்பாண்ட தொழில்நுட்பம் இலங்கயில் பரவலடைந்த தற்கான காரணம் யாது ?**

➢. கி.மு 3ம் நூற்றாண்டளவில் மகிந்ததேரரின் வருகையும் , இந்தியாவுடனான தொடர்புகள் வளர்ச்சி அடைந்தமையும்.

➢. சங்கமித்தை வெள்ளரசு மரக்கிளை கொண்டு வருகின்றபோது மட்பாண்டஉற்பத்தியில் நிபுணத்துவம் பெற்ற எட்டு குயவர் குலங்கள் வருகை தந்தமை.

**39. அநுராதபுர இராச்சிய காலத்தில் செங்கற்கள் உற்பத்தி செய்து கொள்ளும் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதற்கான சான்றாதாரங்களைத் தருக.**

➢. துட்டகைமுனுவின் காலத்தில்"ருவான்வலி சாயவை'' கட்டுவதற்கு தேவையான உறுதியான செங்கற்களை உற்பத்தி செய்ததாக மகாவம்சம் கூறுகிறது.

➢. அநுராதபுர இராச்சியத்தின் முற்பகுதியில் இன்றைய அளவைவிட பெரிய அளவிலான கற்கள் பயன்படுத்தப்பட்டதாக கண்டு பிடிக்கப்பட்டமை.

➢. ஜேதவன தாதுகோபுரத்தை புனரமைக்கும் போது பழைய செங்கல்லின் உறுதிக்குச் சமமான செங்கற்களை உற்பத்திசெய்ய வேண்டி இருந்தமை.

➢. 1990-1991 ல் புனரமைப்பாளர்கள் அநுராதபுரத்தில் "கல்கடவுல" எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் சூளை ஒன்றை அமைத்து செங்கற்களை உற்பத்தி செய்ய வேண்டி நேர்ந்தமை.

➢. பொலன்னறுவையிலும் அரசமாளிகைகள் இதேபோன்ற கற்களைக் கொண்டு அமைக்கப் -பட்டிருந்தது.

**40. செங்கல் , ஓடுகளை உற்பத்தி செய்வோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?.**

➢. ஓட்டுத் தச்சர்

**41. இராசரட்டை காலத்தில் ஓடுகளைப் பயன்படுத்திக் கூரைகள் வேயப்பட்ட கட்டிடங்களைத் தருக.**

➢. சமயக்கட்டிடங்கள் ➢. பொதுக்கட்டிடங்கள்

➢. அரண்மனைகள் ➢. பிரபுக்களின் வீடுகள்

**42. ஓட்டு உற்பத்தியில் கையாளப்பட்ட படி முறைகளைத் தருக?**

➢. பொருத்தமான களிமண்ணைத் தெரிவு செய்து பதப்படுத்துதல்.

➢. ஓட்டு அச்சில் வார்த்து வடிவத்தை உருவாக்கிக் கொள்ளல்.

➢. காயவைத்தல். சுடுதல்.

**43. உலோகத் தொழில்நுட்பம் புராதன காலத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்ததற்கான காரணங்களைத் தருக.**

➢. விவசாயத்தொழில் வளர்ச்சியுற்றமை.

➢. நகரமயமாக்கல் அதிகரித்தமை.

➢. கட்டிடவாக்கத்துறை வளர்ச்சியுற்றமை.

➢. இந்திய தொழினுட்ப முறைகள் நாட்டினுள் வேகமாகப் பரவியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. கல்வெட்டுக்களில் உலோகத் தொழில் புரிந்தோர் தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட சொற்பதங்களைத் தருக.

- ➤. கபர (கொல்லர் , கம்மாளர்)
- ➤. தம்பர (செப்புக்கம்மாளர்)
- ➤. தோபஷ (தகரக்கம்மாளர்)

45. இராசரட்டை நாகரீக காலத்தில் பாவனையில் இருந்து வந்த உலோகங்கள் எவை எனக் குறிப்பிடுக.

- ➤. இரும்பு
- ➤. செம்பு
- ➤. வெள்ளி
- ➤. தங்கம்

46. இலங்கையில் தங்கம் பயன்பாட்டில் இருந்தமைக்கான சான்றுகளைத் தருக.

- ➤. 1994ம் ஆண்டு அபயகிரிவிகாரைப் பிரதேசத்தில் 370-438 கிராம் நிறையுள்ள 5 தங்கத்துண்டுகள் கிடைத்தமை.
- ➤. புராதன தங்கக் கைத்தொழிற்சாலை ஒன்று இருந்தமைக்கான ஆதாரங்கள் அபயகிரிப் பொய்கை அகழ்வில் கிடைக்கப்பெற்றமை.
- ➤. தங்கத்தை உருவாக்குவதற்கான சூளை ,தண்ணீர்நிரப்பி வைத்துக்கொள்ளும் மட்பாத்திரம்.போன்றவை கண்டெடுக்கப் பட்டமை
- ➤. அபயகிரிவாவி அகழ்வில் தங்கத்திலான காப்பு,பாதசரம்,மோதிரம்,தோடு,மாலை என்பன கிடைக்கப் பெற்றுள்ளமை.

47. தங்க ஆபரணத்தொழில் வேறு எந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. விகாரைகளின் சிலைகளுக்கு தங்கமுலாம் பூசுதல்.

➢. பல்வேறு அலங்காரப்பொருட்களை உற்பத்தி செய்தல்.

**48. இலங்கையில் இரும்புப் பாவனை பற்றிய குறிப்புக்களை எழுதுக.**

➢. கி.பி 3ம் நூற்றாண்டின் பின்னர் இரும்புப் பாவனை இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன .

➢. போர்ஆயுதங்கள், விவசாய உபகரணங்கள் இரும்பினால் உருவாக்கப்பட்டிருந்தமை.

➢. பலாங்கொடை , சமனெலவெவ , சீகிரியின் அலகொலவெல ,தெஹிகஹ, எலகந்த ஆகிய இடங்களில் இரும்பு உருவாக் கப்பட்ட விதம் தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றமை.

➢. தெஹிகஹ எலகந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக சூளையை எரியச்செய்வதற்காக ஊதுளையால் பயன்படுத்திய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றமை.

➢. சமனெலவெவப் பகுதியில் இயற்கையாகக் கிடைக்கும் கற்களைப் பயன்படுத்தி சூளையில் உள்ள கரியைத்தொடராக எரியச் செய்துள்ளமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றமை

**49. வாஸ்து சாஸ்த்திரம் என்றால் என்ன.**

➢. வீடு , கட்டிடம் போன்ற நிர்மாணத்துறை சார்ந்த ஒரு கலையம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. இலங்கையில் கட்டிட நிர்மாணத்துறை சார்ந்த அறிவு கிடைக்கப் பெற்றதற்கான காரணிகளை தருக.

- ➢. மகிந்ததேரர் வருகையுடன் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய உறவு.
- ➢. விகாரைகள்,தூபிகள் அமைக்கப்பட்டமை.

51. இராசரட்டை காலத்தின் இருவகைப்பட்ட கட்டிட நிர்மாணங்களைத் தருக.

I. சமயச் சார்புடைய கட்டிடங்கள்

- ➢. தாதுகோபம்
- ➢. தூபிமனை
- ➢. போதிமனை
- ➢. சிலைமனை
- ➢. விகாரை , ஆராமைகள்
- ➢. தியான மண்டபம்
- ➢. தானசாலை
- ➢. தேவாலயம்

II. சமயச் சார்பற்ற கட்டிடங்கள்

- ➢. அரண்மனை
- ➢. கோட்டை
- ➢. வைத்தியசாலை
- ➢. வீடு
- ➢. மலசலகூடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. தாது கோபத்தில் காணப்படும் பிரதான அம்சங்களைத் தருக.

- அடித்தளம் , முத்தட்டு வளையம் , அண்டம் , சதுரக்கோட்டம் தேவன்கோட்டம், கலசபீடம் , கலசவளையம் , கலசம்
- தாதுகோபத்தின் அழகை மேம்படுத்துவதற்காக அதனை அண்டி நாற்றிசையையும் நோக்கிய வண்ணம் நுழைவாயில்கள் நான்கு கட்டப்பட்டிருந்தன.

உ+ம் :இராசரட்டை காலத்துக்குரிய மிகச் சிறந்த துறைவாயில் மிகிந்தலை கண்ட சைத்தியவின் கிழக்குத் திசையில் அமைந்திருந்தது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. அநுராதபுரக்காலம் , பொலன்னறுவைக்காலம் என்பவற்றில்நிர்மாணிக்கப்பட்ட தூபிகளையும் மன்னர்களையும் அட்டவணைப்படுத்துக.

| காலம் | தூபி | கட்டிய மன்னர்கள் |
|---|---|---|
| அநுராதபுரம் | தூபராமய | தேவநம்பிய தீசன் |
| | ருவன்வலிசாய | துடடகைமுனு |
| | மிரிசு வெட்டி | துட்டகைமுனு |
| | அபயகிரி | வலகம்பாகு |
| | ஜேதவனராமய | மகாசேனன் |
| பொலன்னறுவை | கிரிவிகாரை<br>தெமனமகாசாய<br>யுதகனாவவிகாரை<br>தெதிகம கொடவிகாரை | மகாபராக்கிரமபாகு |
| | ரன்கொத்விகாரை | நிஸங்கமல்லன் |

54. தூபி மனை என்பது யாது ?

➢. அளவில் சிறிய தூபிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டிடமே தூபிமனை ஆகும்.

➢. தாது கோபத்தைச் சுற்றி கற்றூண்களை நட்டு அதன் மீது கம்புகளிலான கோளவடிவிலான கூரையை அமைத்து தூபிமனை கட்டப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. உ+ம் : மெதிகிரிய வட்டதாகய , தூபராம , லங்காராமய , அம்பஸ்தலதூபி, திரியாயதூபி (மெதிகிரிய தூபிமனை இராசரட்டைக் காலத்திற்குரிய கலைத்திறனான தூபிமனை ஆகும்).

**55. போதிமனை என்பது யாது ?**

➢. வெள்ளரசு மரத்தின் பாதுகாப்பிற்கும் அலங்காரத்திற்கும் அதனைத் தரிசிக்க வருவோரின் வசதிக்காகவும் அதனை மையமாகக் கொண்டு கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதனையே போதிமனை என்பர் உ+ம்-புராதன அனுராதபுர போதிமனை

-நில்லக்கம போதிமனை (குருணாகல்)

**56. சிலைமனை என்பது யாது ?**

➢. புத்தரின் சிலையை அமைத்து அதனை மழை,வெயில் என்பவற்றில் இருந்து பாதுகாப்பதற்கும், வழிபட வரும் மக்களின் வசதிக்காகவும் அமைக்கப்பட்ட கட்டடங்களே சிலைமனைகள் எனப்பட்டன.

**57. இராசரட்டை நாகரீக காலத்தில் சிலைமனைகளை நிர்மாணிக்கும் போது பின்பற்றப்பட்ட மரபுகளை எழுதுக.**

➢. கந்தகுடிமரபு ➢.கெடிகேமரபு

➢. லென்விகாரைமரபு

**58. கந்தகுடிமரபில் நிர்மாணிக்கப்பட்ட சிலைமனைகளை குறிப்பிடுக.**

➢.கிபத்வெஹர.➢.விஜிரராம ➢.பங்குலிய

➢. தொலுவில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. கெடிகேமரபுரீதியான சிறந்த நிர்மாணங்களைக் குறிப்பிடுக.

➤. தூபராம ➤.லங்காதிலக

➤.திவங்கசிலைமனை

60. லென் விகாரையின் சிறப்பு யாது ?.

➤. சயனநிலையில் அமைக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலை

61. பிக்குமாரின் ஆரம்பகால கட்டிடங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன.

➤.இயற்கையான குகைகளில் கற்பீலிகள் அமைத்து உருவாக்கப்பட்டிருந்தன.

உ+ம் : மிகிந்தலை,வெஸ்ஸகிரி, நிடிகல ,ரஜகல (பீலிக்குக் கீழே குகையின் முற்புறமாக சுவர் கட்டி மரப்பலகையினால் கதவு,யன்னல் இட்டு அக்குகைகள் மிகவும் முறையாக உருவாக்கப்பட்டிருந்தன.)

62. பொலன்னறுவைக் காலத்தில் எழுந்த சிவாலயங்கள் பற்றி குறிப்பிடுக.

➤. முதலாம் இலக்க சிவன்கோவில் , இரண்டாம் இலக்க சிவன்கோவில் போன்றன இதற்கு எடுத்துக்காட்டாகும்.

➤. சோழர் கட்டடக்கலை மரபுக்கு ஏற்ப கட்டப்பட்டன.

➤. 2ம் இலக்க சிவன் கோவில் மிகவும் பாதுகாப்புக்கு ஓர் சிறந்த உதராணமாகும்.

63. இராசரட்டைக் காலத்தில் அரசகுலத்தவர் , பிரபுக்கள், குடிமக்களின் தேவைக்காக அமைக்கப்பட்ட சமயச் சார்பற்ற கட்டிடங்கள் எவை ?.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢.அரண்மனைகள் ➢. கோட்டைகள்
➢.வைத்தியசாலைகள் ➢. வீடுகள்
➢.மலசலகூடங்கள்

**64. சிகிரியா ஏன் அனுராதபுரகால விசேடமான அரண்மனைத் தொகுதியாகக் கருதப்படுகிறது?**

➢.காசியப்பனால் உருவாக்கப்பட்ட இம்மாளிகை குன்று ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதோடு , நீர்ப்பூங்கா , நீர்அகழி பாதுகாப்புமதில் என்பவற்றுடன் அலங்காரமாக உருவாக்கப்பட்டிருந்தது.

**65. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பொலன்னறுவைக் காலத்திற்குரிய அரண்மனைகளைக் குறிப்பிடுக**

➢. 1ம் விஜபாகுவின் அரசமாளிகை
➢. 1ம் பராக்கிரமபாகுவின் வைஜந்த மாளிகை.
➢. 1ம் பராக்கிரமபாகுவின் பண்டுவாஸ் நுவர மாளிகை.

**66. புராதன வைத்தியசாலை சிதைவுகள் காணப்பட்ட இடங்களைத் தருக.**

➢.மெதிரிகிரிய ➢.மிஹிந்தலை
➢.பொலன்னறுவை

**67. புராதன வைத்தியசாலை பற்றிக் கூறுக.**

➢. நிலாமுற்றம் ஒன்றுடன் தங்கும் அறைகள் அமைக்கப்பட்டிருந்தன.
➢. களஞ்சியம் , மருந்து உற்பத்திச்சாலை என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன.
➢. கருங்கல்லினால் மருத்துவ ஓடம் அமைக்கப்பட்டிருந்தது.
➢.வைத்தியஉபகரணங்கள்பல கண்டெடுக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**68. புராதன மலசல கூடத்தில் பின்பற்றப்பட்ட தொழினுட்ப முறை ஒன்றினைத் தருக?.**

➢ . மலசல கூடங்களிலிருந்து வெளியேறும்நீரை அப்படியே விட்டுவிடாது சுத்தமாக்கி வெளியேற்றுவதற்காக நிலத்துக்குள்ளேயே வடிகட்டும் பானைகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கிவடிகட்டும் பொருட்களை அதனுள் இட்டு வைத்திருந்தனர். இது அக்கால மக்கள் சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்தினர் என்பதைக் காட்டுகிறது.

**69. புராதனகால புத்தர் சிலைவடிவங்களைக் குறிப்பிடுக.**

**அமர்ந்தசிலை (தியானம், வீராசனம்) -**

உ + ம் ➢தொலுவில புத்தர்சிலை ,

➢அநுராதபுரம் சமாதி புத்தர்சிலை

**நிற்கும் சிலை**

உ + ம் ➢. அவுக்கண புத்தர் சிலை.

➢. ரெஸ்வெஹெரசிலை.

**சயனசிலை**

உ + ம் ➢. உத்தரராம,கல்விகாரைச் சிலை.

**70. போதிசத்துவர் என்பவர் யார் ?**

➢. புத்தராகப் பிறப்பதற்கு முன்னைய பிறப்பை போதிசத்துவர் என்பர்.

**71. போதிசத்துவர்சிலைகள் அமைந்துள்ள இடங்களைத் தருக?**

➢. தம்பே கெடை(அநுராதபுரம்)

➢. புதுறுவாகல ➢. வெலிகம குஷ்டராஜகல

➢. யடாலவெஹர


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**72. கலையம்சம் நிறைந்த மன்னர்களின் சிலைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

➢. துட்டகைமுனு ,பாதிகாபயன் சிலை (ருவான்வெலிசாய முற்றத்தில் காணப் படுகிறது.)

➢. பராக்கிரமபாகுசிலை - பராக்கிரமபாகு சமுத்திரத்திற்கு அருகில்.
(இச்சிலை கபில அல்லது புலஸ்தி முனிவருடைய சிலையாக இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.)

**73. சந்திர வட்டக்கல் என்றால் என்ன?**

கட்டடத்தின் நுழைகின்ற வாயிலின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரைச் சந்திரன் வடிவங்களைக் கொண்ட கற்செதுக்கல் ஆகும்.

**74. சந்திரவட்டக் கல்லின் அம்சங்களை எழுதுக.**

➢. மத்தியில் மலர்ந்த தாமரைப் பூவின் ஒருபகுதி காணப்படுகிறது.

➢. தாமரைப்பூவினைச் சுற்றிய மலர்க்கொடியான வட்டம் .

➢. தாமரை மொட்டுக்களுடன் கூடிய வரிசை காணப்படுகிறது.

➢. அடுத்தவரிசையில் சிங்கம் , யானை, குதிரை ,எருது எனும் மிருக வரிசையும்.

➢. முடிவில் தீச்சுவாலைஅல்லது பூவிதழ் அலங்காரமும் காணப்படுகிறது.

**75. பொலன்னறுவைக் காலத்தில் சந்திரவட்டக் கல்லில் இருந்து நீக்கப்பட்ட உருவம் எது ? ஏன் ?**

➢. எருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இந்துசமயச் செல்வாக்கின் காரணம் (இந்துமதச் சின்னம்)

76. **இசுறுமுனியவில் காணப்படும் கலைத்திறன் மிக்க படைப்புக்கள் எவை ?**

➢. இருறு முனிய காதலர் சிலை.

➢. குதிரைத் தலையும் மனித உருவமும்.

77. **உலோகத்தால் உருவாக்கப்பட்ட பௌத்த, இந்து மதச் சிலைகளைக் குறிப்பிடுக.**

➢. **பௌத்தமதச் சிலைகள்:**
வெஹரகல அவலோகிதேஸ்வர , போதிசத்துவ உருவச்சிலை.

➢. **இந்துமதச் சிலைகள்:**
சிவன் , நடராஜர் , பார்வதி , சூரியன்

78. **இலங்கையில் ஆரம்பகாலத்தில் இருந்த சித்திரங்கள் எங்கு கண்டறியப்பட்டன.**

➢. சிதுல்பவ்வ ,ஹிந்தகல , கரம்பகல , வெஸ்ஸகிரிய , சீகிரியா.

79. **சிகிரியாவின் சித்திரங்கள்(ஓவியங்கள்) பற்றி எழுதுக.**

➢. முழுமையான சித்திரங்களாகக் காணப்பட்டது.

➢. கி.பி 5ம் நூற்றாண்டுக்குரியதாகும்.

➢. சிகிரியாவின் கிழக்கு மேற்குப் பகுதிகளில் கற்குடைவுகள் இரண்டினுள்
வரையப்பட்டுள்ள ஓவியங்களில் தாமரை அல்லி,செண்பகம் ஆகிய மலர்களைச் சூடியும் கைகளில் ஏந்தியும் உள்ள பெண்உருவங்கள் காணப்படுகிறன.

➢. மஞ்சள் , கபிலம் , சிவப்பு , நீல நிறங்கள் தெளிவாகத் தென்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. ஓவியங்கள் ஈரச்சுதை முறையில் வரையப்பட்டுள்ளது.

**80. பொலன்னறுவைக்கால சித்திரங்களுக்கு உதாரணங்கள் தருக.**

➢. திம்புலாகல மார வீதிய.

➢. புள்ளிகொட

➢. கல்விகாரை.

➢. திவங்க சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 02
# கண்டி இராச்சியம்

01. **கண்டி இராச்சியத்தின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.**

➢. இலங்கையின் மத்திய மலைநாட்டில் செங்கடகல நகரை மையமாகக் கொண்டு கண்டி இராச்சியம் உருவானது.

➢. 16ம் நூற்றாண்டில்இருந்து இந்நாட்டின் கரையோரத்தில் தமது ஆட்சியைநிறுவிய போத்துக்கேயர் , ஒல்லாந்தர் ,ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களின் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்த வண்ணம் 1815ம் ஆண்டு வரை இந்நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டது.

➢. இயற்கையின்பாதுகாப்பு உள்ள பிரதேசமாக அமைந்திருந்தது.

➢. அநுராதபுரத்தை அடுத்து நீண்டகாலம் இராசதானியாக விளங்கியது.

➢. மலைகளாலும் ஆறுகளாலும் காடுகளாலும் சூழப்பட்ட இராச்சியமாகும்.

02. **கண்டிஇராச்சியத்தின் இயற்கைப் பாதுகாப்பு அரண்களைக் குறிப்பிடுக.**

➢. நீர் அரண் - மகாவலிகங்கை
மலைஅரண் - உடவத்த , ஹந்தான
கடின நுழைவாயில்-பலன,உன்னஸ்கிரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. கண்டி இராச்சியத்தின் மறுபெயர்களைக் குறிப்பிடுக.**

- பஞ்சமலைநாடு
- செங்கடகல
- மலைநாடு
- மஹநுவர
- மலையக அரசு
- மலையகத் தலைநகர்
- கண்டி
- ஸ்ரீவர்த்தன புர

**04. கண்டி இராச்சியத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுக.**

- கண்டிக் கோட்டை மன்னன் 6ம் பராக்கிரம பாகுவினால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளன் ஜோதியஇளவரசன் கண்டியை சுகந்திர மடையச் செய்ய எண்ணி பராக்கிரமபாகு மன்னனுக்கு எதிராகச் செய்த கிளார்ச்சி தோல்வியில் முடிந்தது.
- ஆறாம்பராக்கிரமபாகுவின் மரணத்தின் பின் கோட்டைஇராச்சியம் படிப்படியாக பலவீனமடைந்தது.
- இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சேனாசம்மத விக்கிரமபாகு எனும் பிரதானி மலைநாட்டை (கண்டி)விடுவித்து தனி அரசு ஒன்றை உருவாக்கினான்.
- சேனாசம்பத விக்கிரமபாகுவே கண்டி இராச்சியத்தின் முதல் மன்னனானான்.

**05. சேனாசம்மத விக்கிரமபாகுவையடுத்து அவன் மகன் ஜயவீரபாண்டாரனது காலத்தில் கோட்டை இராச்சியம் எத்தனை அரசுகளாகப் பிளவுண்டது?**

- கோட்டை
- றைகம
- சீதாவாக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. ஜயவீரபண்டாரவின் பின்பு ஆட்சிக்கு வந்த அவனது மகன் கரலியத்த பண்டார மீது பிரதானிகள் ஏன் வெறுப்புற்றனர்?**

- ➢. சீதாவாக்கை ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல் காரணமாக போர்த்துக்கேயருடன் நட்புறவு கொண்டமை.
- ➢. போர்த்துக்கேயருடைய கலாச்சாரத்தை அனுசரித்ததமை.

**07. கரலியத்த பண்டார போர்த்துக்கேயரிடம் தஞ்சமடையக் காரணம் யாது ?**

- ➢. மலைநாட்டுப் பிரதானியான வீரசுந்தர பண்டார சீதாவாக்கை மன்னன் முதலாம் இராஜசிங்கனுக்கு கண்டியைக் கைப்பற்ற உதவி புரிந்தான்.
- ➢. இராஜசிங்களின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள முடியாத கரலித்த பண்டார தனது மகள் குசுமாசன தேவியுடனும் , மருமகன் யமசிங்கபண்டாரவுடனும் போர்த்துக்கேயரைத் தஞ்சமடைந்தான்.

**08. குசுமாசனதேவியும் , யமசிங்கபண்டாராவும் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய வேளையில் பெற்றுக்கொண்ட பெயர்களைத் தருக.**

- ➢. குசுமாசனதேவி - டொனா கத்தரினா
- ➢. யமசிங்க பண்டார - டொன் பிலிப்

**09. முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தின் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக.**

- ➢. 1574 ல் கண்டி இராச்சியம் மீது படை எடுத்தான் (கண்டியர்கள் இதனை போர்த்துக்கேயர் உதவியுடன் தோற்கடித்தனர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. 1580 ஆம் ஆண்டளவில் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவீரசுந்தர பண்டாரவைத் தனது பிரதிநிதியாகக்கொண்டு ஆட்சிசெய்தான்.
- ➢. சிறிதுகாலத்தில் வீரசுந்தர பண்டாரவிற்கும் இராஜசிங்கனுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் வீரசுந்தர பண்டார கொலை செய்யப்பட்டான்.
- ➢. இராஜசிங்கன் சைவசமயத்தைத் தழுவி பௌத்த குருமாருக்கு எதிராகச் செயற்பட்டான்.

**10. வீரசுந்தரபண்டாரவின் மகன் கோணப்பு பண்டார பற்றி எழுதுக.**

- ➢. வீரசுந்தரபண்டார கொலை செய்யப்பட்டதன் பின் பாதுகாப்புக் கருதி போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்தான்.
- ➢. டொன் ஜுவான் என்ற பெயருடன் கத்தோலிக்க மதத்தைத் தழுவினான்.
- ➢. 1592ம் ஆண்டு 1ம் விமலதர்ம சூரிய எனும் பெயரில் கண்டி மன்னன் ஆனான்.

**11. முதலாம் விமலதர்மசூரியன் எதிர்கொண்ட சவால்களைத் தருக.**

- ➢. சட்ட பூர்வமான ஆட்சி உரிமை இல்லாமை.
- ➢. கண்டி இராச்சியத்தை சீதாவாக்கை, போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டியிருந்தமை.

**12. முதலாம் விமலதர்ம சூரியன் ஆட்சியுரிமையை உறுதிப்படுத்திக் கொண்ட விதத்தினைக் குறிப்பிடுக.**

- ➢. டொன்பிலிப் மரணமுற்ற வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு ஆட்சியைக்கைப் பற்றி மீண்டும் பௌத்த மதத்தை தழுவினான்.

- ➢. விமலதர்ம சூரியன் எனும் நாமத்தையும் சூடினான்.
- ➢. டொன் கதரினாவை (குசுமாசனதேவியை) மணந்து சட்டபூர்வமான மன்னனான்.

**13. முதலாம் விமலதர்ம சூரியனின் அரசியல் ரீதியான முக்கிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- ➢. டொன்கத்தரினாவை மணந்ததன் மூலம் கண்டி இராச்சியத்தில் புதிய அரச பரம்பரை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.
- ➢. 1ம் இராஜசிங்கனை 1592ல் கனேதன்ன யுத்தத்தில் தோற்கடித்து சீதாவாக்கை இராச்சியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தான்.
- ➢. 1594ல் போராலோபஸ் டி சூசா தலைமையில் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்த போர்த்துக்கேய தளபதியை தந்தூரப் போரில் தோல்வியுறச் செய்தான்.
- ➢. 1602ல் தொன் ஜெரனிமேதா டி அசவேது தலைமயில் மலையகத்தை தாக்க வந்த போர்த்துக்கேயரை பலன என்ற இடத்தில் தோல்வியுறச் செய்தான்.

**14. லஸ்கரின் படை என்றால் என்ன. ?**

- ➢. போர்த்துக்கேயரின் கீழ் பணியாற்றிய உள்நாட்டு படைவீரர்களையே லஸ்கரின் படை என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. **முதலாம் விமலதர்ம சூரியனின் சமயப் பணிகளைத் தருக.**

- பர்மாவில் இருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பந்தாவை மீண்டும் நடாத்தியமை.
- இலங்காதிலக, கடலாதெனிய விகாரைகளைப் புனரமைத்தமை.
- பாதுகாப்புக் கருதி சீதாவாக்கையில் தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை கண்டிக்கு எடுத்து வந்து தலதாமாளிகையில் தாபனம் செய்தமை.
- உள்நாட்டுக் கலாச்சாரத்தின் மத்திய நிலையமாக கண்டியினை மாற்றியமைத்தமை.

16. **செனரத் மன்னனின் அரசியல் நடவடிக்கைகளைத் தருக.**

- முதலாம் விமலதர்ம சூரியனின் ஒன்று விட்ட சகோதரன் என்ற வகையில் கண்டி இராச்சியத்தின் மன்னனானான்.
- யுத்தத்தை விட சமாதானத்தை விரும்பி 1617ல் போர்த்துக்கேயருடன் சமாதான ஒப்பந்தம் மேற்கொண்டான்.
- 1630ல் கெப்படன் ஜெனரலான கொன்ஸ்தாந்தாந்தைன் தசா பெரும் படையுடன் ஊவா பிரதேசத்தை ஆக்கிரமித்தான்.
- மன்னனின் மகனான மகா ஆஸ்தான குமாரனின் தலைமையில் இரந்தெனியவில் போர்த்துக்கேயப் படையைத் தோல்வியுறச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. **செனரத் மன்னனின் புதல்வர்கள் பெயர்களைக் குறிப்பிடுக.**

➢. குமாரபால ➢.விஜபால ➢.இராஜசிங்க

18. **செனரத் மன்னன் கண்டி மன்னனாக ஆட்சியினை ஏற்றபோது எதிர்கொண்ட சவால்கள் இரண்டினை எழுதுக.**

➢. கண்டி இராச்சியத்தின் ஆட்சியுரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இருந்தமை.

➢. போர்த்துக்கேயரினால் கண்டி இராச்சியத்திற்கு இருந்த அச்சுறுத்தலை தவிர்த்துக்கொள்ள வேண்டியிருந்தமை.

19. **இரண்டாம் இராஜசிங்கனின் (செனரத்மன்னனின் மகன் )இலட்சியம் யாதாகவிருந்தது ?**

➢. இந்நாட்டில் இருந்து போர்த்துக்கேயரை விரட்டுவது.

20. **இரண்டாம் இராஜசிங்கனின் அரசியல் நடவடிக்கைகளைத் தருக.**

➢. போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

➢. 1638 ஆம் ஆண்டில் இவனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

➢. 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தரின் உதவியுடன் போர்த்துக்கேயரை இந்நாட்டை விட்டு வெளியேற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. போர்த்துக்கேயரிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களை ஒல்லாந்தர் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர்.
- ➢. கண்டி இராச்சியத்தின் எல்லைகளை விரிவுப்படுத்தினான்.
- ➢. போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த பெரும் பிரதேசத்தை இம்மன்னன் கண்டி இராச்சியத்துடன் இணைத்தான்.
- ➢. 1638ல் தியோகு த மெல் கஸ்ரோ எனும் போர்த்துக்கேய கேப்டன் ஜெனரல் கண்டி மீது படையெடுப்பைமேற்கொண்டான். கன்னொருவ எனுமிடத்தில் இப்படையைச் சுற்றி வளைத்துக்கொண்டு அப்படையை படுதோல்வி அடையச்செய்தான்.
- ➢. 1635-1687 வரை கண்டியை ஆட்சி செய்து, கண்டி இராச்சியத்தின் வரலாற்றில் நீண்ட காலம் ஆட்சிசெய்த பெருமையைப் பெற்றான்.

## 21. இரண்டாம் விமலதர்ம சூரியனின் ஆட்சி முக்கியத்துவத்தினை எழுதுக.

- ➢. இரண்டாம் இராஜசிங்கனின் மகனானஇவன் கண்டி இராச்சியத்தின் மன்னன் ஆனான். இவன் மிகவும் அமைதியான ஆட்சியாளன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கரையோரத்தை ஆட்சிபுரிந்து வந்த ஒல்லாந்தருடன் நட்புறவு கொண்டிருந்தான்.

➢. இவனது ஆட்சியில் மலையக பிரதானிகளின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது.

➢. பௌத்த சமய வளர்ச்சி கருதி, பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா வைபவத்தை நடாத்தினான்.

➢. மும்மாடிகள் கொண்ட தலதாமாளிகை இம்மன்னனால் அமைக்கப்பட்டது.

22. **"இரண்டாம் விமலதர்மசூரியனையடுத்து அவனது மகனான வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்" கண்டி இராச்சியத்தின் மன்னனானான்" இவன் பற்றிய குறிப்புகளை தருக.**

➢. கண்டி இராச்சிய மன்னர்களுள் மிகவும் பலவீனமானவனாகக் காணப்பட்டான்.

➢. இவனது காலத்தில் பிரதானிகளின் அதிகாரம் வளர்ச்சியுற்றது.

➢. இம்மன்னனும் தனது தந்தை வழியே தென்னிந்திய நாயக்கவம்ச இளவரசியை மணந்துக்கொண்டான்.

➢. இவனுக்கு வாரிசு இன்மையால் நாயக்க வம்சத்தவர்கள் கண்டி இராச்சியத்தின் அரசுரிமையைப் பெற்றுக்கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கண்டிச் சிங்கள அரச வம்சத்தின் இறுதி மன்னனும் இவனேயாவான்.

23. **கண்டி இராச்சியத்தின் முதலாவது நாயக்க மன்னன் யார்?**

➢. ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன்

24. **இவன் எம்முறையில் கண்டி அரசுரிமையைப் பெற்றான்?**

➢. வீரபராக்கிரம நரேந்திரசிங்கனின் நாயக்க வம்ச மனைவியின் சகோதரன் என்ற முறையில் அரசுரிமையைப் பெற்றான்.

25. **ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னனது ஆட்சி பற்றி எழுதுக.**

➢. நாயக்க வம்சத்தவன் ஆகையால் பிக்குகளினதும் பிரதானிகளதும் நல்லெண்ணத்தைப் பெற முயற்சித்தான்.

➢. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கதேரரின் பௌத்த சமய சேவைகளுக்கு உதவிகள் புரிந்தான்.

➢. தேரரின் ஆலோசனைப்படி உபசம்பதா விழாவிற்கு பௌத்த பிக்குமாரை வரவழைக்க நடவடிக்கை எடுத்தான். ஆனால் அம்முயற்சி கைகூடவில்லை.

26. **கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் எவ்வாறு மலைநாட்டு மன்னன் ஆனான்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஸ்ரீ விஜய இராஜசிங்கனுக்கு வாரிசு இன்மையால், அவனது மரணத்தை அடுத்து அவனது மனைவியின் சகோதரன் என்ற உரிமையில் மலைநாட்டு மன்னன் ஆனான்.

**27. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனது ஆட்சி பற்றி தருக.**

- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கதேரரிடம் பௌத்தசமயத்தை கற்றுக்கொண்டமையால், பௌத்தசமயம் பற்றிய அறிவு இருந்தது. இதன் காரணமாக கண்டி மக்கள் இம்மன்னன் மீது மிகவும் மரியாதை செலுத்தினர்.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கதேரரின் வழிகாட்டலின்படி பௌத்த சமய மறுமலர்ச்சியின் முன்னோடியாகச் செயற்பட்டான்.
- 1753 ஆம் ஆண்டு ஒல்லாந்தரிடம் கப்பல் ஒன்றைப் பெற்று சீயம் நாட்டிற்கு தூதுக்குழு ஒன்றை அனுப்பி உபாலிதேரர் உட்பட சமயகுருமாரை வரவழைத்து உபசம்பதா வைபவத்தை நடாத்தினான்.
- சரணங்க தேரருக்கு உயர்வான "சங்கராஜா" பதவியை வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மலைநாட்டிலும்,கரையோரப்பகுதிகளிலும் அழிவுற்றிருந்த விகாரைகளையும் தாதுகோபங்கள் பலவற்றையும் புனரமைப்புச் செய்வித்தான்.

(தம்புள்ள விகாரை, ரிதி விகாரை, வாகிரிய விகாரை)

➢. இந்து சமயத்தவனாக இருப்பினும் தலதா பெரஹராவுடன் தேவாலய பெரஹராவையும் இணைத்து எசலப் பெரஹராவினை நடத்துவித்தான்.

➢. சரணங்கதேரரின் சமய, கல்வி நடவடிக்கைகளுக்கு உதவிப்புரிந்தான்.

**28.ஒல்லாந்தரை வெளியேற்ற கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் மேற்கொண்ட நடவடிக்கை யாது?**

➢. ஆங்கிலேயரின் உதவியைப் பெற முயற்சி செய்தான்.

➢. 1762ல் ஜோன்பைபஸ் எனும் தூதுவனை மன்னன் சந்தித்தான்.

(அத்தூதுவனினால் சாதகமான விளைவு ஏற்படவில்லை)

**29.வெளியேற்றும் முயற்சியை அறிந்த ஒல்லாந்தரது நடவடிக்கை எவ்வாறு அமைந்தது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கண்டி இராச்சியம் மீது 1765ம் ஆண்டு படையெடுப்பை மேற்கொண்டனர். ஆனால் வெற்றிபெறவில்லை. ஒல்லாந்தரால் தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருந்து வந்தது.

➢. நீண்டகால சமானத்தின் காரணமாக 1765ம் ஆண்டு இருவரும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.
(இந்த ஒப்பந்தம் மூலம் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தின் கரையோரப் பிரதேசத்தை தமதாக்கிக்கொண்டனர்)

**30. இராஜாதி இராஜசிங்க மன்னன் பற்றிக் குறிப்பிடுக.**

➢. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் சகோதரன் ஆகையால் ஆட்சியுரிமை பெற்றான். பௌத்த சமயத்தில் பற்றுமிக்கவனாயிருந்தான்.

➢. இவனது ஆட்சியின் போதே 1782ல் ஹியுபோயிட் தலைமையில் ஆங்கிலேயத் தூதுக்குழு இவனைச் சந்தித்தது.

➢. இவனது ஆட்சிகாலத்திலேயேஆங்கிலேயர் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டனர்.

**31. இராஜாதி இராஜசிங்கனின் பின்னர் கண்டியின் அரசுரிமைக்குப் போட்டியிட்ட இருவரின் பெயர்களை குறிப்பிடுக.**

➢. கண்ணுசாமி ➢. முத்துசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. கண்ணுசாமி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்னும் பெயரில் 1798ல் எவ்வாறு அரசனானான்?**

➢. பிரதான பிரதானியான பிலிமத்தலாவையின் உதவி கிட்டியமையால்.

**33. பிலிமத்தலாவை ஆங்கிலேயருடன் சேர்ந்து மன்னனுக்கு எதிராகச் செயற்பட்டதன் காரணம் யாது?**

➢. கண்ணுசாமியை (மன்னனை) தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் திட்டம் தோல்வியுற்றதுடன், இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்ப்பட்டமையால்.

**34. பிரித்தானியாவின் முதலாவது ஆளுனரான பிரட்ரிக் நோத் 1803ல் மேற்கொண்ட படையெடுப்பு தோல்வியில் முடிந்ததற்கான காரணங்களைத் தருக.**

➢. கண்டியின் புவியியல் அமைப்பினைத் தெரிந்துக் கொள்ளாமை.

➢. கண்டி இராச்சியத்தின் போர் முறை பற்றிய போதிய அறிவின்மை.

➢. பொது மக்களுடைய ஆதரவு மன்னனுக்கு கிடைத்தமை.

➢. காலநிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் சமய சேவைகள் இரண்டினை எழுதுக.

➢. தலதா மாளிகைக்கு மனங்கவர் பத்திரிப்பு என்று அழைக்கப்படும் எண்கோண மண்டபத்தைக் கட்டினான்.

➢. தலதா மாளிகைக்கு முன்னால் பாற்கடல் என அழைக்கப்படும் தடாகத்தை நிர்மாணித்தான்.

36."பிரித்தானிய ஆளுனர் றொபர்ட் பிரௌன்றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான்". (1815ம் ஆண்டு கைப்பற்றப்பட்டது) காரணங்களைத் தருக.

➢.அரசியல் பிரச்சினைகள் உருவானமை.

➢. மன்னனுக்கும் பிரதானிகளுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது.

➢. குடிமக்களின் நல்லுறவு சீர் குலைந்தது.

➢. ஜோன் டொய்லி மூலம் கண்டி இராச்சியம் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டமை.

➢. பிரதானி எகலபொலவின் உதவி ஆங்கிலேயருக்குக் கிட்டியமை.

37.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மக்களால் காட்டிக் கொடுக்கப்படும் போது ஒளிந்திருந்த இடம் எது?

➢.மெதமக நுவரையில் உள்ள வீடு ஒன்றில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38.பிரித்தானியரால் கைது செய்யப்பட்ட மன்னன் எங்கு கடத்தப்பட்டான்?

➢. இந்தியாவில் உள்ள வேலூருக்கு.

39.மார்ச் 2ம் திகதி 1815ம் ஆண்டு "கண்டி ஒப்பந்தம்" யாருக்கிடையில் ஏற்படுத்தப்பட்டது. (மகுல் மடுவ மண்டபத்தில் எழுதப்பட்டது).

➢. றொபர்ட் பிரௌன்றிற்கும் கண்டி இராச்சிய பிரதானிகளுக்குமிடையில்.

40.ஒப்பந்தத்தில் கூறப்பட்ட சில விடயங்களைக் குறிப்பிடுக.

➢. இலங்கைத்தீவு பிரித்தானியாவின் கீழ் குடியேற்ற நாடாகியது.

➢. கண்டி இராச்சியம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்ப்பட்டது.

➢. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் உட்பட நாயக்க வம்சத்தினருக்கு அரசின் மீதான உரிமை இல்லாதொழிக்கப்பட்டது.

41."இந்நாட்டின் பாரம்பரிய வாழ்க்கைமுறை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது" விவசாய நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுக.

➢. சுயதேவையினை பூர்த்தி செய்யும் விவசாயப் பொருளாதாரமே நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. மழைநீரைக் கொண்டே மலைச்சரிவுகளில் படிக்கட்டு முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

➢. நெற்செய்கையுடன் சேனைப்பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

➢. குரக்கன், இறுங்கு, எள், திணை ஆகிய பயிர்கள் சேனையில் பயிரிடப்பட்டன.

➢. வீட்டுத்தோட்டச் செய்கையாக பலாக்காய், ஈரப்பலாக்காய், கிழங்குவகை,மரக்கறிகள், பழவகைகள், பாக்கு, ஏலம்,மிளகாய், சாதிக்காய் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

➢. பாலைப் பெற்றுக்கொள்வதற்காகவும், விவசாய, போக்குவரத்து நடவடிக்கை களுக்காகவும் மாடுகள் வளர்க்கப்பட்டன.

**42. கண்டி இராச்சியத்தின் வர்த்தக நடவடிக்கை களைத் தருக.**

➢.உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரம் இடம்பெற்றது.

➢.கரையோரப் பிரதேச உற்பத்திகள் மலையகப் பிரதேசங்களிலும், மலையகப் பிரதேச உற்பத்திகள் கரையோரப் பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்பட்டன.

➢.வர்த்தகத்தின் போது நாணயங்கள் பரிமாற்றப்பட்டதோடு பண்டமாற்று முறையும் நிலவி வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ மலைநாட்டிற்கும் தாழ்நிலப்பகுதிக்கு மிடையே கடவைகள் ஊடாக வர்த்தகப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன.

➢ .வெளிநாட்டு வியாபாரமானது அரசனின் ஏகபோக உரிமையாக இருந்து வந்தது.

➢ .இந்தியாவுக்கும், கண்டி இராச்சியத்திற்கும் இடையில் வர்த்தகம் இடம்பெற்றது.

**43.கண்டி இராச்சியத்தின் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான பொருட்களையும் விலங்குகளையும் குறிப்பிடுக.**

| ஏற்றுமதிப் பொருட்களும் விலங்குகளும் | இறக்குமதிப்பொருட்களும் விலங்குகளும் |
|---|---|
| கறுவா | குதிரை |
| பாக்கு | புடைவை |
| மட்பாண்டம் | மிளகு |
| யானையும்யானைத்தந்தமும் | பீங்கான் பாத்திரங்கள் |
| முத்தும் மாணிக்கமும் | கருவாடு |
| வாசனைப்பொருட்கள் | |
| வெற்றிலை | |
| ஏலமும் கராம்பும் | |
| சாதிக்காய் | |
| தேன் மற்றும் மெழுகு | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**44.கண்டி இராச்சியத்தின் கைத்தொழில்கள் பற்றித் தருக.**

- ➢.நாட்டிற்குத் தேவையான கைத்தொழில் உற்பத்திப்பொருட்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளப்பட்டன.
- ➢.குலத்தை அடிப்படையாகக் கொண்டே கைத்தொழில் புரிவோர் காணப்பட்டனர்.
- ➢.பரம்பரை பரம்பரையாக அத்தொழில் தொடர்பான அறிவைக் கொண்டிருந்தனர்.

**45.கைத்தொழிலில் சிறப்புப் பெற்ற பிரதேசங்களையும், கைத்தொழில்களையும் குறிப்பிட்டு எழுதுக.**

கொத்மலை - இரும்பு உற்பத்தி

கிரிவவுல - செம்பு உற்பத்தி

தும்பறை - பன்புல்லினால் இழைக்கும் பொருள்

**46.கண்டி இராச்சிய சமூக அமைப்பினை பற்றிக் குறிப்பிடுக.**

- ➢.கிராமிய சமூகமாகக் காணப்பட்டதுடன் சுயதேவைப் பூர்த்தியுள்ளதாகவும் காணப்பட்டது.
- ➢.ஒவ்வொரு குலத்திற்கும் தொழில் பிரிவினருக்கும் வெவ்வேறான கிராமங்கள் அமைக்கப்பட்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢.சமூகத்தினரிடையே புரிந்துணர்வுடன் கூடிய சமூகப் பாதுகாப்பு நிலவியது.

➢.சமூகத்தில் மதகுருமார்கள், பிரபுக்கள், குடிமக்கள் என மூன்று வகையினர் வாழ்ந்தனர்.

➢.குடும்ப அலகு மிகுந்த பலம் வாய்ந்ததாக இருந்தது.

➢.தந்தை வழிச் சமூகம் காணப்பட்டது.

**47.கண்டி சமூகத்தில் நிலவிய மூவகை திருமணங்களைக் குறிப்பிடுக.**

➢.தீக திருமணம் :- மணமகளை மணமகன் தனது வீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கேயே வாழ்வது.

➢.பின்ன திருமணம் :- மணமகன் மணமகளின் வீட்டிலேயே தங்கியிருந்து வாழ்வது.

➢.பல் புருஷ திருமணம் :-பல சகோதர்களுக்கு ஒரு மனைவி இருத்தல்.

**48.கண்டி இராச்சிய கட்டிடக்கலை பற்றி எழுதுக.**

➢.கம்பளை, கோட்டை இராச்சிய காலங்களில் நிலவிய கட்டிடக்கலை முறை கண்டி இராச்சிய காலத்திலும் பேணப்பட்டுவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢.சமய ரீதியான பல கட்டிடங்கள் முக்கியமானவையாகும்.

உ+ம் :- தலதா மாளிகை, எம்பக்கதேவாலயம், லங்காதிலக விகாரை மெதவலவில் கட்டப்பட்ட டெம்பிட்ட விகாரையும் சிறப்பான கட்டிடக் கலையை எடுத்துக்காட்டும் ஓர் கட்டிடமாக இன்றும் விளங்குகின்றது.

➢.தூண்களின் மீது விகாரை கட்டும் மரபினைப் பின்பற்றி அமைக்கப்பட்டதுடன் கறையான் போன்றவை மரத்தூண்களை அரித்துவிடாது இருப்பதற்கு மண்ணின் மீது கற்றூண்களை நட்டு அவற்றுள் மரத்தூண்களை பொருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**49.கண்டி இராச்சிய காலத்தில் ஓவியக்கலை எவ்வாறு சிறப்பு பெற்றிருந்தது?**

➢.பௌத்த சமயத்தின் பண்பை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் ஊடகமாக ஓவியக்கலை காணப்பட்டது.

➢.கற்றோர், கல்லாதோர் ஆகிய அனைவராலும் புரிந்துக் கொள்ளக்கூடிய வகையில் ஓவியங்கள் வரையப்பட்டமை.

➢.சுவர்களை பகுதி பகுதியாகப் பிரித்து நீண்ட கதைகளை படிமுறையாக முன்வைக்கும் ஓவியங்கள் வரையப்பட்டமை. ஒவ்வொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியச் சட்டகத்தின் கீழும் கதையம்சங்கள் சுருக்கமாகப் பெயரிடப்பட்டிருந்தன.

- ➢.வெற்றிடங்களை நிரப்புவதற்கு மலர்கள் வரையப்பட்டமை.
- ➢.மனிதர்கள், பிராணிகள், தாவரங்கள் ஆகிய உருவங்களில் சரியான அளவீடு பேணப்பட்டமை.
- ➢.தாவரங்கள் கனியங்கள் ஆகியவற்றிலிருந்து நிறங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையும் சிவப்பு நிறத்தை அதிகளவிலும் பயன்படுத்தி இருந்தனர்.

வெஸ்ஸந்தர, தேவபத்த, தஹகம்பொத ஆகிய ஜாதக நூல்களில் இருந்து பெறப்பட்ட ஜாதகக் கதைகளை ஓவியங்களாக வரைந்திருந்தமை.

**50.கண்டிக்கால ஓவியக்கலையை பார்வையிடக் கூடிய இடங்களைத் தருக.**

- ➢.தம்புள்ள விகாரை
- ➢.தெகல் தொருவ விகாரை
- ➢.தலதாமாளிகை
- ➢.கிரி விகாரை
- ➢.முல்கிரிகல விகாரை
- ➢.மெதவல விகாரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 03
## ஐரோப்பிய மறுமலர்ச்சி

1. **ஐரோப்பிய மறுமலர்ச்சி என்றால் என்ன?**
மீண்டும் மலர்தல் என்பது மறுமலர்ச்சி ஆகும். 14ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவின் கல்வி,சமயம்,விஞ்ஞானம் இலக்கியம்,கலை போன்ற துறைகளில் எற்பட்ட மலர்ச்சியே ஐரோப்பிய மறுமலர்ச்சி ஆகும்.

2. **மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்களைத் தருக.**
   - ➢. கிபி 1453ம் ஆண்டு இஸ்லாமியரான துருக்கியர் கொன்ஸதாந்திநோபிளைக் கைப்பற்றியமையே உடனடிக்காரணமாக அமைந்தது.
   - ➢. வர்த்தகம் வளர்ச்சி அடைதலும் செல்வந்தர்கள் தோற்றம் பெற்றமையும்.
   - ➢. கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டமை.
   - ➢. பல சாதனங்களின் கண்டுபிடிப்புகள் ஏற்பட்டமை.
   - ➢. ஐரோப்பாவில் பல பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றமை.
   - ➢. குடியேற்ற நாடுகள் தோற்றம் பெற்றமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "மத்திய காலம் என்பது கி.பி 500 - கி.பி 1500 வரையான காலப்பகுதியே ஆகும்". மத்தியகாலப்பகுதியில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்களைக் குறிப்பிடுக.

- ➢. பொலஞ்ஞா, பாதுவா - இத்தாலி
- ➢. பரிஸ் - பிரான்சு
- ➢. ஒக்ஸ்போட் , கேம்பிரிஜ் - இங்கிலாந்து

4. இத்தாலியில் வெனிஸ் , ஜெனோவோ , புளோரன்ஸ் ஆகிய நகரங்களில் மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்களை தருக.

- ➢. புதிய செல்வந்தர்கள் காணப்பட்டமையும் அவர்களின் அனுசரணையும்.
- ➢. செல்வந்தர்கள் கலைகளில் நாட்டம் கொண்டிருந்தமை.
- ➢. புளோரன்ஸ் நகரில் வாழ்ந்த மெடிஸி குடும்பம் உதாரணமாகும்.
- ➢. இத்தாலியில் பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றமை.

5. "15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மொழி , இலக்கியம் , சித்திரம் , சிற்பம் , கட்டிடக்கலை ஆகியவற்றில் ஏற்பட்ட எழுச்சியே கல்வி மறுமலர்ச்சி எனப்படும்."

கல்வி மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢.கிரேக்க , இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்ட நூல்களின் பாவனை அதிகரித்தமையினால் அம்மொழிகளில் புத்தெழுச்சி ஏற்பட்டது.

➢.கிரேக்க , இலத்தீன் மொழிகளை கற்பது நாகரீகமாகக் கருதப்பட்டது.

➢.பல்கலைகழகங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளில் உரோம நூல்கள் உட்படுத்தபட்டன.

➢.கிரேக்க உரோம விஞ்ஞான அறிவு புத்தெழுச்சி பெற்றது.

**6. மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய எழுத்தாளர்களைத் தருக.**

| நாடு | நூல்ஆசிரியர் |
| --- | --- |
| இத்தாலி | - தாந்தே,பெட்ராக்,பொக்காஷியோ |
| இங்கிலாந்து | - வில்லியம் ஷேக்ஸ்பியர் |
| ஒல்லாந்து | - இராஸ்மஸ் |

**7. மானிட வாதம் என்றால் என்ன?**

➢.மறுமலர்ச்சிக்கு முன்னர் அனைத்தையும் விட கடவுளே மேலானவர் என்ற எண்ணக்கரு நிலவியது.ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தில் கடவுளை விடவும் அனைத்து உயிரினங்களை விடவும் மனிதனே மேலானவன் என்பதே மானிட வாதம் ஆகும்

**8. மானிட வாதம் காரணமாக எற்பட்ட விளைவுகளைத் தருக.**

➢.மனிதன் இதுவரைநடந்தபாதை, அவனது கலையம்சங்களின் திறமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் மீது அவதானம் செலுத்தப்பட்டது.

- .வரலாறு , கலை போன்ற பல துறைகள் தோற்றம் பெற்றன.
- .கல்வியானது சமயத்தை மட்டுமன்றி மனிதனையும்,மனித வாழ்கையைப் பற்றி அறியப் பயன்பட்டது.
- .சமூகத்தில் மனிதன் மேலானவன் என மதிக்கப்பட்டான்.
- .மனிதன் தர்க்கரீதியாகச் சிந்திக்கத் தொடங்கினான்.

**9.மறுமலர்ச்சிக்கு முற்பட்ட கால கலைப்பணிகளின் இயல்புகளையும்,மறுமலர்ச்சிக் கால கலைப்பணிகளின் இயல்புகளையும் ஒப்பிடுக.**

**மறுமலர்ச்சிக்கு முற்பட்ட கால கலைப்பணிகள்**

- .சமயம் சார்ந்ததாக இருந்தமை
- .கிறிஸ்துநாதர் , கன்னிமரியாள் மற்றும் பிரசித்தி பெற்ற புனிதர்கள் ஆகியோர் கலையாக்கங்களின் பொருளாக அமைந்தனர்.
- . கலைஞர்கள் வகுப்புரீதியாக தம்மை ஒழுங்கமைத்தனர். அவர்களது படைப்புகளும் வகுப்பினின் பெயரால் அழைக்கப்பட்டது.
- .திருச்சபைமட்டுமே கலைப் படைப்புகளுக்கு அனுசரணை வழங்கியது.
- . சுதந்திரமான படைப்புகளுக்கு இடமில்லாமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சிக்கால கலைப் பணிகள்.

- ➢. உலகவிடயங்களுக்கு முதலிடம் அளித்தமை.
- ➢. அரசர்கள் ,அரசிகள் , இளவரசர்கள், இளவரசிகள் ,செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தோர் கலையாக்கப் பொருளாக அமைந்தனர்.
- ➢. படைப்பாளியின் பெயரால் அழைக்கப்பட்டது.
- ➢. செல்வந்தர்கள் பலர் அனுசரணை வழங்கியமை.
- ➢. சுதந்திரமான படைப்புக்களை வெளியிட்டமை.

**10.புதியகலைகளின் தோற்றத்தின் மத்திய நிலையமாக காணப்பட்ட நகரம் எது?**

- ➢. இத்தாலி–புளொரன்ஸ் நகர்

**11.மறுமலர்ச்சிக்கு பிற்பட்டகால ஓவியம் எதனைப் கருப்பெருளாகக் கொண்டிருந்தது?**

- ➢. லௌகீகவாழ்க்கை.

**12.மறுமலர்ச்சிகால ஓவியர்களைக் குறிப்பிடுக?**

- ➢. லியானாடோடாவின்சி
- ➢. மைக்கல் ஆஞ்சலோ
- ➢. டொனடெலோ

**13.லியாணாடோடாவின்சி பற்றிய குறிப்புகளைத் தருக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤. பிறந்த இடம் - இத்தாலி

(புளோரன்ஸ்நகர்)

➤. சிறப்புப் பெற்ற துறைகள் - சிற்பத்துறை,கட்டிடக் கலை , பொறியியல் ,இசைக் கலை

➤. புகழ்ப்பெற்ற ஓவியங்கள் - மோனலிசா. இயேசுவின் இறுதி இராப்போசனம்.

**14. பூரணமனிதன் என்றழைக்கப்பட்டவர் யார்?**

➤. லியானாடோடாவின்சி

**15. மைக்கல் ஆஞ்சலோ பற்றிய குறிப்புகளை தருக.**

➤. பிறந்த இடம் - இத்தாலி

(புளோரன்ஸ் நகர்).

➤. சிறப்பு பெற்ற துறைகள்-ஓவியம் ,சிற்பக்கலை , கட்டிடக் கலை.

➤. புகழ்ப்பெற்ற படைப்புக்கள் -

**ஓவியம்** -உரோமில் சிஸ்டைன் ஆலய பாவுகையில் வரையப்பட்ட ஓவியம், இறுதித் தீர்ப்பு.

சிற்பங்கள் - பியெட்டா சிலை , டேவிட்சிலை,மோஸசின்சிலை

**16. டொானடெலோ என்பவரால் அமைக்கப்பட்ட சிற்பம் எது?**

➤. புளோரன்ஸ் நகில் அமைந்த புனிதயோவானின் (ஜோன்) உருச்சிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மறுமலர்ச்சிக்கால கட்டிடக் கலைக்கு சிறந்த எடுத்துகாட்டாக விளங்குவது எது?

➢.உ ரோமில் அமைந்துள்ள புனிதபேதுருவின் ஆலயம்.

18. மறுமலர்ச்சிக்காலக் கட்டிடக்கலைகளின் பண்புகள் எவை?

➢. வட்டமான வில் வளைவு.

➢. உயர்ந்தகோபுரம்.

➢. அரைவட்டத்துடனான சிகரம்.

19.கட்டிடக்கலையில் சிறப்புப் பெற்றவர்களைக் குறிப்பிடுக.

➢. பிரமத்தே,மைக்கல் ஆஞ்சலோ, லியானாடோடாவின்சி , ராபாயல்

20. கட்டிடக்கலையின் எடுத்துகாட்டுகள் 2 தருக.

➢. புனிதபேதுருவின் பெசிலிக்கா ஆலயம்.

➢. சிஸ்டைன் தேவாலயம்

21. மறுமலர்ச்சியின் விளைவாக வைத்தியத் துறையில் புகழ் பெற்றவர்களையும் கண்டுபிடிப்புகளையும் எழுதுக.

➢.வில்லியம்ஹார்வே- மனிதஉடலின்குருதிச் சுற்றோட்டம் பற்றியமுக்கிய தகவல்களைக் கண்டறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢.**பெசரல்ஸ்** - நோய்கள் ஏற்படுவதற்கான (சுவிஸ்) காரணங்களையும் ,குணமாக்கும் வழிகளைப்பற்றியும் ஆய்வினை மேற்கொண்டார்.

➢. **மைக்கல் சர்வேட்ஸ்** - மனித உடலின் குருதி இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து மீண்டும் உடல் முழுவதும் பரவிச்செல்கிறது என்பதைக் கண்டறிந்தார்.

22. **நிக்கலஸ் கொப்பர்னிகஸ் பற்றிய குறிப்புகளைத் தருக.**

➢. நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்.

➢. போலந்துநாட்டைசேர்ந்தவர்.

➢. புவிகோளவடிவானது எனவும்,புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச்சுற்றி வலம் வருகின்றது என்பதையும் கண்டறிந்தார்.

23. **ஜொகனஸ் கெப்லர் பற்றிக் குறிப்பிடுக.**

➢. கொப்பனிக்கஸ் கூறிய கருத்துக்களை உறுதி செய்து அதனை முன்னெடுத்துச் சென்றார்.

➢. கோள்கள் அனைத்தும் சூரியனை நீள் வட்டப் பாதையில் சுற்றி வருவதாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கலிலியோ கலியின் (செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை)கண்டு பிடிப்புகளைத் தருக.

- ➢. தொலைநோக்கி.
- ➢. வியாழனைச் சூழ உபகோள்கள் உள்ளன என்பது.
- ➢. சந்திரனில் மலைகளும் ,பெரும் குழிகளும் உள்ளன என்பது.

25.மதச் சீர்த்திருத்தம் ஏற்பட வழி வகுத்த கரணிகளைத் தருக.

- ➢.மறுமலர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட சிந்தனைப் புரட்சி.
- ➢.விஞ்ஞான முன்னேற்றமும் கண்டுபிடிப்புகளும்
- ➢.கத்தோலிக்க சமயக் கொள்கையும் திருச்சபையின் அதிகாரங்களையும் எதிர்க்க முற்பட்டமை.
- ➢.மத்தியகால இறுதிப் பகுதியிலிருந்த குருமார்களின் தகாதசெயற்பாடுகள்

26.திருச்சபைக்கு எதிராக செயற்பட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

- ➢. புரட்டஸ்தாந்தர்

27. மத்தியகால இறுதிப் பகுதியில் திருச்சபைக்கு எதிராக கருத்து வெளியிட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யார்?

- ➢.ஜோன் வைக்கிளிப் - இங்கிலாந்து
- ➢.பிரான்சிஸ் இராஸ்மஸ் - பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. திருச்சபைக்கு எதிராக இயக்கங்களுக்கு முன்னின்று தலைமை வகித்தவர்களைக் குறிப்பிடுக.

- ➢. மாட்டின் லூதர்
- ➢. ஜோன் கல்வின்

29. மாட்டின் லூதரின் சமயச் சீர்திருத்தங்களை குறிப்பிடுக.

- ➢. திருச்சபை கொள்கையில் விவிலிய படிப்பிற்கு மாறாக பலவிடயங்கள் உள்ளன எனக் கூறினார்.
- ➢. பாவமன்னிப்பு பத்திர விற்பனைக்கு எதிராக தனது கருத்துக்கள் உள்ளடங்கிய பத்திரமொன்றை விற்றன்பேர்க் ஆலயக் கதவில் ஒட்டினார்.
- ➢. திருச்சபை கொள்கைக்கு எதிராக மேலும் கருத்துக்களை முன்வைத்தார்.
- ➢. அச்சுஇயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக லூதரின் கருத்து ஐரோப்பா முழுவதும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு: 4
## நாடுகாண் பயணங்களும் , ஐரோப்பியர் கீழைத் தேசங்களுக்கு வருகை தருதலும்

1. **நாடுகாண் பயணம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?**
   - ➢. நாடுகளைத் தேடிச் செல்லுதல் என்பதாகும்.
   - ➢. புதிய கடல் வழிகளைக் கண்டறிந்து அதுவரை அறியப்படாத நாடுகளைக் கண்டுபிடித்தல்

2. **15ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் நாடு காண் பயணங்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகள் பற்றிய எது வரையான அறிவைப் பெற்றிருந்தனர்?**
   - ➢.ஐரோப்பா, வட ஆபிரிக்கா, ஆசியாவின் ஒரு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளைப் பற்றி தெளிவான விளக்கம் இருக்கவில்லை.
   - ➢.இந்தியா,சீனா என்பவற்றின் வர்த்தகர்கள், மார்க்கோபோலோ போன்ற தேசஞ்சாரிகளின் குறிப்புகளிலிருந்து பெறப்பட்ட சில தகவல்கள் பற்றிய விளக்கம்.
   - ➢.ஆபிரிக்காவின் பெரும்பகுதி அவுஸ்திரேலியா , அமெரிக்கா கண்டம் தொடர்பான தெளிவான அறிவு அவர்களுக்கு இருக்கவில்லை.

3. **நாடு காண் பயணங்கள் ஆரம்பிக்கும் முன்னர் வர்த்தகத்தின் பெரும் பகுதி எக்கடலைச் சூழ்ந்து காணப்பட்டது?**
   - ➢.மத்திய தரைக் கடலினைச் சூழ்ந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **மத்திய தரைக் கடலினைச் சூழ்ந்து காணப்பட்ட வர்த்தக நகரங்கள் எவை?**

➢.வெனிஸ் ➢.ஜெனோவா

➢.அலெக்சாந்திரியா ➢.கொன்ஸ்தாந்தி நோபிள்

5. **நாடுகாண் பயணங்கள் ஆரம்பமாவதற்கு முன்பு ஆசியாவிற்கும் , ஐரோப்பாவிற்கும் இடையே காணப்பட்ட மூன்று வழிகளையும் தருக.**

➢.கொன்ஸ்தாந்தி நோபிள் நகரிலிருந்து பாரசீகம் ,மத்திய ஆசியா ஊடாக சீனா வரையிலான பட்டுப்பாதை

➢.கொன்ஸ்தாந்தி நோபிள் நகரிலிருந்து மத்திய தரைக் கடல் வழியாக எகிப்து வந்து செங்கடலில் பயணித்து இந்துசமுத்திரத்தை அடைதல்.

➢.கொன்ஸ்தாந்தி நோபிள் நகரிலிருந்து பாரசீக வளைகுடா வழியாக இந்தியாவின் மேற்குக் கரையை அடைதல்.

6. **"தவளம்"முறையில் (தரை வழி) கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் எங்கு விற்பனை செய்யப்பட்டன.**

➢.பாரசீக வளைகுடா வழியாகக் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் கொன்ஸ்தாந்தி நோபிளில் விற்பனை செய்யப்பட்டது.

➢.செங்கடல் , எகிப்து வழியாகக் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் அலெக்சாந்திரியாவில் விற்பனை செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நாடுகாண் பயணத்திற்கான உடனடிக் காரணம் யாது?

➢. கொன்ஸ்தாந்தி நோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை. (கி.பி.1453)

8. ஐரோப்பாவின் நாடுகாண் பயணத்துக்கு உந்துதல் அளித்த காரணிகளைக் குறிப்பிடுக.

➢. முஸ்லிம்கள் கையிலிருந்த கீழைத்தேச வர்த்தகத்தை பெற்றுக்கொள்ளல்.

➢. பெஸ்டர் ஜோன் எனும் பேரரசின் கீழ் பிறந்த கிறிஸ்தவப் பேரரசைத் தேடிச்செல்லுதல்

➢. கீழைத் தேசங்களில் முஸ்லிம்களைத் தோற்கடித்து அப்பிரதேசங்களில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்.

➢. உலகத்தைப் பற்றி அறிந்து அனுபவ ரீதியாக உணரமுடிதல்.

➢. போர்த்துக்கல் , ஸ்பானியா , ஒல்லாந்து, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் கடலை அண்மித்து இருப்பதால் கடலில் பயணம் செய்ய அவர்கள் எளிதில் தூண்டப்பட்டமை.

9. மறுமலர்ச்சிக் காலத்தில் நாடுகாண் பயணங்களுக்கு விஞ்ஞான முன்னேற்றம் உதவிய வழிகளைக் குறிப்பிடுக.

➢. திசையறி கருவி , வட துருவ நட்சத்திரமானி போன்ற கருவிகள் கண்டுப்பிடிக்கப்பட்டமை.

➢. தொலமியின் உலக வரைபடம்

➢. புவி கோளவடிவமானது என போலந்து நாட்டைச் சேர்ந்த நிக்கலஸ்கொப்பர்னிகஸ் உறுதி செய்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கடல் பிரயாணத்திற்கான பாரிய கப்பல் கட்டும் முறை வளர்ச்சியுற்றமை.

**10. நாடுகாண் பயணங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் நாடுகளையும் குறிப்பிடுக.**

| | |
|---|---|
| கடலோடி ஹென்றி | - போர்த்துக்கல் |
| பேர்டினன் மகலன் | - ஸ்பானியா |
| இசபெலா | - ஸ்பானியா |
| 7ம் ஹென்றி | - இங்கிலாந்து |

**11. ஐரோப்பியரின் நாடுகாண் பயணத்திற்கான நோக்கம் எக்கூற்றிலிருந்து தெளிவாகிறது?**

➢. வாஸ்கொடகாமா இந்தியாவிற்கு வந்தபின் தாம் கிறிஸ்தவர்களையும் , வாசனைத் திரவியங்களையும் தேடியே வந்ததாகக் கூறிய கூற்றிலிருந்து அவர்களின் பொருளாதார, சமய நோக்கம் தெளிவாகிறது.

**12. போர்த்துக்கல் நாடுகாண் பயணத்தில் முதன் முதலில் ஈடுபட வழிவகுத்ததிற்கான காரணிகளைத் தருக.**

➢. போர்த்துக்கல் ஐபீரியக் குடா நாட்டில் அமைந்துள்ளமை. (புவியியல் அமைப்பு)

➢. கடல் வழியான தொடர்புகளை வெளிநாடுகளுடன் கொண்டிருந்தமை.

➢. போர்த்துக்கேயர் இயற்கையாகவே சிறந்த மாலுமிகளாக விளங்கியமை.

➢. கொன்ஸ்தாந்தி நோபிள் துருக்கியர் வசமாகும் முன்னரே நாடுகாண் பயணத்தில் ஆர்வம் கொண்டிருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. போர்த்துக்கேய மன்னன் கடலோடி ஹென்றி ஆர்வம் காட்டியமை.

**13. நாடுகாண் பயணம் மேற்கொள்வதற்கு கடலோடி ஹென்றியினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளைத் தருக.**

- ➢. லிஸ்பன் நகரில் கடற்பிரயாணப் பயிற்சிப் பாடசாலையை ஆரம்பித்து அக்கலையைக் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான்.
- ➢. பயிற்சிப் பாடசாலையில் கப்பல் கட்டுதல் , தேசப்படக்கலை , வானசாஸ்திரம் போன்ற பாடங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- ➢. நவீன பிரயாண ஆய்வுமுறை செய்யப்பட்டது.

**14. பர்த்தலோமியஸ் டயசின் கடற்பயணம் பற்றி எழுதுக.**

- ➢. போர்த்துக்கேயரான இவரும்,இவரது குழுவும் ஆபிரிக்காவின் கிழக்குக் கரைவழியாக பயணித்து 1488ம் ஆண்டு ஆபிரிக்காவின் தென்முனையை அடைந்தனர்.
- ➢. அவ்விடத்து புயலில் சிக்கியதனால் அவ்விடத்திற்கு "புயல் முனை" எனப்பெயரிட்டு மீண்டும் போர்த்துக்கலுக்கு திரும்பினர்.
- ➢. இது போர்த்துக்கேயர் பெற்ற பாரிய வெற்றியெனக் கொண்டு போர்த்துக்கேய மன்னர் அதற்கு "நன்னம்பிக்கை முனை" எனப் பெயரிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. ஆசியாவுக்கு புதிய கடற்பாதை காண்பதாகிய ஐரோப்பியரது நோக்கம் நிறைவேற வழிவகுத்த கடற் பயணம் எது?**

➤. பர்த்தலோமியஸ் டயசின் பாதை வழியாக பயணித்த இன்னோர் போர்த்துக்கேயரான வாஸ்கொடகாமா குழுவினர் 1498ம் ஆண்டு இந்தியாவின் கள்ளிக் கோட்டையை அடைந்தமையாகும்.

**16. ஸ்பானியா நாடுகாண் பயணங்களில் ஈடுபாடு காட்டியமைக்கான பின் புலங்கள் யாவை?**

➤. ஐபீரியாக் குடாநாடுகளில் பெரிய நாடாக விளங்கியமை.

➤. முற்காலங்களில் இருந்து வந்த கடற்பயண ஆர்வம்.

➤. பேர்டினன், இசபெலா ஆகியோரது ஆட்சியில் ஸ்பானியா பலம் வாய்ந்த அரசாக வளர்ச்சியடைந்தமை.

➤. பொருளாதார பலம் வளர்ச்சியடைந்திருந்தது.

➤. பேர்டினன் ,இசபெலா ஆகியோரின் அனுசரணை

**17. ஸ்பானியர் எவ்வழியில் ஆசியாவுக்கு வருவதற்கு ஆர்வம் காட்டினர்?**

➤. அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதியில் பயணித்து ஆசியாவுக்கு வரும் வழியை கண்டுப்பிடிப்பதில் ஈடுப்பட்டனர்.

**18. கிறிஸ்தொபர் கொலம்பஸின் நாடுகாண் பயணம் பற்றி எழுதுக.**

➤. பேர்டினன் ,இசபெலா ஆகியோரின் உதவியுடன் கடற்பயணம் மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1492ம் ஆண்டு அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேற்கில் அமைந்துள்ள பகமாஸ் தீவுக் கூட்டத்தில் ஸ்பானியோலா தீவில் தரை இறங்கினார்.
➢. அந்த இடம் இந்தியா என்று கருதினான்.
➢. அத்தீவுக் கூட்டமே இன்று மேற்கிந்திய தீவுகள் என அழைக்கப்படுகிறது.

**19. பேர்டினன் மகலன் பற்றியும் அவனது கடற்பிரயாண அனுபவம் பற்றியும் குறிப்பிடுக.**

➢. 1480ம் ஆண்டு போர்த்துக்கலில் பிறந்து தனது 25வது வயதில் சிறந்த மாலுமியானார்.
➢. 1519ம் ஆண்டு ஸ்பானிய மன்னர் சார்ள்ஸ் அனுசரணையுடன் ஐரோப்பாவிலிருந்து மேற்காகப் பயணித்து ஆசியாவுக்கு புதுவழி காணும் நோக்கில் தனது பயணத்தை ஆரம்பித்தான்.
➢. தென் அமெரிக்காவின் தென்கரையில் அமைந்துள்ள பசுபிக் சமுத்திரத்தின் நுழைவாயிலான நீரிணையைக் கண்டு பிடித்தார்.இதுவே மகலன் நீரிணை எனப்பெயர் பெற்றது.
➢. மேலும் பசுபிக் சமுத்திரத்தில் நீண்ட பயணத்தை மேற்கொண்ட பின்னர் பிலிப்பைன்ஸ் தீவை அடைந்தான்.
➢. பிலிபிபைன்சில் சுதேசிகளுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தான்.
➢. மகலனின் கடற்பயணத்தால் உலகம் கோளவடிவமானது என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. நாடுகள் ஆண்டு பயணத்தை மேற்கொண்டோர் கண்டுப்பிடிக்கப்பட்ட பிரதேசம் ஆகிய தலைப்புக்களின் கீழ் அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.

| நாடுகள் | ஆண்டு | பயணம்மேற்கொண்டோர் | கண்டு பிடிக்கப்பட்ட இடம் |
|---|---|---|---|
| போர்த்துக்கல் | 1488 | பர்த்தலோமியஸ் டயஸ் | நன்னம்பிக்கை முனை |
| போர்த்துக்கல் | 1498 | வாஸ்கொடகாமா | கள்ளிக்கோட்டை (இந்தியா) |
| போர்த்துக்கல் | 1500 | கப்ரால் | பிரேசில் |
| ஸ்பானியா | 1492 | கொலம்பஸ் | கரீபியன் தீவுகள்/மேற்கிந்தியத் தீவு |
| ஸ்பானியா | 1498 | அமெரிக்கா வெஸ்புஷி | அமெரிக்கா |
| ஸ்பானியா | 1513 | வஸ்கோநியுனெஸ் தபெல்போவா | பனாமா |
| ஸ்பானியா | 1519 | பேர்டினன் மகலன் | பிலிப்பைன்ஸ் தீவுகள் |
| ஸ்பானியா | 1553 | பிரான்சிஸ்கோ பிசாரோ | கேப்பிரிட்டன் |
| இங்கிலாந்து | 1497 | ஜோன்கபோட் | புனித லோரன்ஸ் |
| பிரான்ஸ் | 1535 | ஜெக்விஸ் | மிசிசிப்பி நதி |
| ஒல்லாந்து | 1609 | ஹென்றி கட்சன் | கட்சன் குடா |
| பிரான்ஸ் | 1573 | தலாசலே | குவிபெக் |
| ஸ்பானியா | | பேர்டினன் கோடேஸ் | மெக்சிக்கோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. இலங்கை,சீனா,இந்தியா போன்ற ஆசிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களைக் குறிப்பிடுக.**

இலங்கை : முத்து இரத்தினக்கல் , வாசனைத் திரவியங்கள், யானைத்தந்தம்.

சீனா : பட்டுத்துணி , பீங்கான்.

இந்தியா : மிளகு , கறுவா , பருத்தித்துணி.

**22. யாவா சுமாத்திரா போர்ணியோ போன்ற கிழக்கிந்திய தீவுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் எவை?**

➢. கராம்பு , ஏலம் , சாதிக்காய்

**23. ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருகை தந்ததன் நோக்கங்கள் யாவை?**

➢. ஆசியாவில் உற்பத்தியாகும் வாசனைத் திரவியங்கள் உட்பட ஏனைய வர்த்தகப் பொருட்களைப் பெற்று ஐரோப்பாவிற்கு கொண்டு சென்று அதனை விற்று அதிக இலாபம் பெற்றுக்கொள்ளல்.

➢. முஸ்லிம்களின் கையிலிருந்த ஆசியாவின் வர்த்தக ஏகபோக உரிமையைத் தம்வசம் ஆக்குதல்.

➢. ஆசிய நாடுகளில் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்புதல்.

**24. போர்த்துக்கேயரின் ஆசிய வருகை குறித்து எழுதுக.**

➢. ஆசியாவுக்கு முதன் முதலில் வருகை தந்த பெருமை போர்த்துக்கேயரையே சாரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1498ல் வாஸ்கொடகாமா இந்தியாவின் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தமை.

➢. இந்தியாவின் கரையோர இராச்சியங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை.

➢. இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்துடன் தொடர்புகளை மேற்கொண்டனர்.

➢. நிர்வாக இலகுவிற்காக கோவாவைக் கைப்பற்றி கீழைத்தேய மத்திய நிலையமாக்கிக் கொண்டனர்.

➢. அதே வேளை தென்கிழக்காசியாவில் வாசனைத் திரவியங்கள் விளையும் தீவுகள் சிலவற்றைக் கைப்பற்றி இந்துசமுத்திரத்தின் அருகில் வர்த்தக ஆதிக்கத்தைக் கட்டியெழுப்பினர்.

**25. ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வந்தமை பற்றி குறிபிபிடுக.**

➢. போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்து ஒரு நூற்றாண்டின் பின்னரே ஒல்லாந்தரால் ஆசியாவுக்கு வர முடிந்தது.

➢. 1595ம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வருகை தர ஆரம்பித்தனர்.

➢. 1602ம் ஆண்டு வரை ஒல்லாந்தில் நிறுவப்பட்ட வர்த்தகக் கம்பனிகள் இடையிடையே ஆசியாவுக்கு வந்தனர்.

➢. 1602ம் ஆண்டு ஒல்லாந்த ஆட்சியாளர்கள் பல வர்த்தகக் கம்பனிகளை ஒன்றிணைத்து பலம் வாய்ந்த நிறுவனமாக ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. ஒல்லாந்தர் தமது கீழைத்தேய மத்திய நிலையமாக தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பத்தேவியாவை நிறுவினர்.

➢. 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் போர்த்துக்கேயரின் வர்த்தக ஏகாதிபத்தியத்தை தமதாக்கிக் கொள்ள ஒல்லாந்தர் முயன்றனர்.

**26. ஒல்லாந்தரால் போர்த்துக்கேயர் போன்று ஏன் ஆசியாவின் வர்த்தக ஏகாதிபத்தியத்தை தக்கவைக்க முடியவில்லை?**

➢. பிரித்தானியரதும் , பிரான்சியரதும் வருகையேயாகும்.

**27. ஆசியாவிற்கு பிரித்தானியர் வருகை பற்றி எழுதுக.**

➢. 1600ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவினர்.

➢. இங்கிலாந்து அரசியிடம் ஆசியாவின் வர்த்தக ஏகபோக உரிமை தொடர்பான அதிகாரத்தைப் பெற்றனர்.

➢. இந்தியக் கரையோரப் பிரதேசங்களில் வர்த்தகக் களஞ்சியங்களை நிறுவி அதிகாரத்தை நிலைநாட்டும் குறிக்கோளுடன் செயற்பட்டனர்.

➢. இதன் விளைவாகவே இந்தியா,பர்மா, இலங்கை போன்ற தென் ஆசிய நாடுகள் பிரித்தானியக் குடியேற்ற நாடுகளாயின.

**28. பிரான்சியர் ஆசியாவுக்கு வருகை தந்தமை பற்றி எழுதுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢. பிரான்சியர் 1664ல் பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவினர்.
- ➢. இந்தியாவில் பாண்டிச்சேரி , காரைக்கால், சந்ரநாகூர் போன்ற இடங்களில் வர்த்தகக் களஞ்சியங்களை நிறுவினர்.
- ➢. 17ம் நூற்றாண்டு இறுதிப் பகுதியில் பிரித்தானியரும் ,பிரான்சியரும் இந்தியாவில் தமது ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டு வதற்காக தமக்குள் போரிட்டனர்

**29. ஐரோப்பிய இனத்தவரையும் அவர்களின் கீழைத்தேய மத்திய நிலையங்களையும் குறிப்பிடுக.**

போர்த்துக்கேயர் - கோவா
ஒல்லாந்தர் - பத்தேவியா
பிரான்சியர் - பாண்டிச்சேரி
பிரித்தானியர் - கல்கத்தா/சென்னை/ மும்பை

**30. நாடுகாண் பயணங்களினால் ஏற்பட்ட விளைவுகளைத் தருக.**

- ➢. ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க கண்டங்களில் ஐரோப்பியரின் ஆதிக்கம் பரவியது.
- ➢. ஐரோப்பிய நாகரிகம் பரவலடைந்தது.
- ➢. மதப்பிரசாரங்கள் தீவிரமாக இடம் பெற்றன.
- ➢. குடியேற்ற வாதங்கள் தோற்றம் பெற்றன.
- ➢. வர்த்தகம் ,கைத்தொழில் வளர்ச்சியடைந்தது.
- ➢. சிறப்பானதோர் நிர்வாக முறையின் அறிமுகம் ஏற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு: 5

## இலங்கையின் கரையோரப்பிரதேசம் போர்த்துகேயரின் ஆதிக்கத்திற்குட்படல்.

**1. போர்த்துகேயர் இலங்கை மீது கவனம் செலுத்தத் துண்டுதலாக இருந்த காரணிகளைத் தருக.**

➢. ஐரோப்பாவில் இலங்கைக் கறுவாவிற்கு நல்ல கேள்வி இருந்தமை.

➢. இலங்கையில் சிறந்த கறுவா விளைவதை அறிந்திருந்தார்கள். எனவே தான் போர்த்துகேயர் இலங்கை மீது கவனம் செலுத்தினர்.

**2. இலங்கை பற்றி போர்த்துகேயர் "செய்லான்" என்ற பெயராலேயே அறிந்திருந்தனர். போர்த்துகேய மன்னன் செய்லான் தீவை கண்டுபிடிக்க இராசப்பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டவர் யார்?**

➢. பிரான்சிஸ்கோ டீ அல்மேதா (1505ம் ஆண்டு)

**3. பிரான்சிஸ்கோ டீ அல்மேதாவின் மகன் லோரன்சோ டீ அல்மேதா உள்ளிட்ட குழுவினர் இலங்கையை எவ்வாறு வந்தடைந்தனர்?**

➢. இந்து சமுத்திரத்தில் பயணம் செய்த முஸ்லிம் வர்த்தகக் கப்பலைக் கைப்பற்றும் பணியில் ஈடுப்பட்டிருந்த லோரன்சோ டீ அல்மேதா குழுவினர் புயலில் சிக்கி 1505ம் ஆண்டு எதிர்பாராத விதமாக இந்நாட்டை அடைந்தனர்.

**4. போர்த்துகேயர் இலங்கை வந்தடைந்த போது இருந்த அரசியல் நிலைமைகளைக் குறிப்பிடுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கோட்டை ,கண்டி ,யாழ்ப்பாணம் ,வன்னிப்பிரதேசம் என நான்கு இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

கோட்டை இராச்சியம் - 8ம் வீரபராக்கிரமபகு.
கண்டி இராச்சியம் - சேனாசம்மந்த விக்ரமபாகு.
யாழ்ப்பாண இராச்சியம்- பரராஜ சேகரம்
வன்னி இராச்சியம் - வன்னித் தலைவர்கள்

**5. 8ம் வீரபராக்கிரமபாகுவின் புதல்வர்கள் பெயர்களைத் தருக.**

➢. தர்ம பராக்கிரமபாகு
➢. விஜயபாகு

**6. "பறங்கியர் கோட்டைக்கு போனது போல" என்ற கூற்று மக்களிடையே வழக்கில் ஏற்படக் காரணம் யாது?**

➢. கோட்டை மன்னனைச் சந்திக்கச் சென்ற போர்த்துக்கேய தூதுவர்களை,கொழும்பிற்கும் கோட்டைக்கும் இடையே நீண்ட தூரம் இருப்பதாகக் காண்பிக்கும் பொருட்டு அரசனின் பிரதிநிதிகள் மூன்று நாட்களாகச் சுற்றி வளைத்து அரசமாளிகைக்குஅழைத்துச் சென்றனர்.இதனை அடிப்படையாக கொண்டே இக்கூற்று வழக்கில் வந்தது.

**7. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்துடன் தொடர்பு கொண்டு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதை முஸ்லிம்கள் ஏன் விரும்பவில்லை?**

➢. போர்த்துக்கேயர் வரும்போது இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் வர்த்தக ஏகபோக உரிமை முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தது.
➢. அதனை இழக்க விரும்பாததால் கோட்டை மக்களது உதவியுடன் இடையூறு விளைவித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. விஜயபாகு கொலை (விஜயபாகு கொள்ளைய) என்றால் என்ன?**

➢. 6ம் விஜயபாகுவிற்கு முதலாவது பட்டத்துராணி மூலமாக மூன்று புதல்வர்கள் இருந்தார்கள் (புவனேகபாகு,றைகம பண்டார,மாயாதுன்னை)

➢. அரசி இறந்த பின்பு மணம் செய்துகொண்ட கீரவல்லியின் மகன் தேவராஜவுக்கு அரசுரிமை வழங்க முயன்றான்.

➢. இதன் காரணமாக மூன்று புதல்வர்களும் கண்டி இராச்சிய அரசனின் உதவியுடன் அரசமாளிகையை முற்றுகையிட்டு 1521ல் விஜயபாகுவைக் கொலை செய்தனர்.

➢. இதுவே விஜயபாகு கொலை எனப்பட்டது.

**9. விஜயபாகு கொள்ளையவைத் தொடர்ந்து (1521ல்) கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்பிரிவுகளை குறிப்பிடுக.**

கோட்டை - 7ம் புவனேகபாகு
றைகம - றைகமபண்டார
சீதாவாக்கை - மாயாதுன்னை

**10. புவனேகபாகுவின் பேரனின் பெயர் என்ன?**

➢. தர்மபாலன்

**11. தர்மபாலனின் தாய் தந்தையரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

தாய் - சமுத்ராதேவி (புவனேகபாகுவின் மகள்)
தந்தை - விதிய பண்டார

**12. கோட்டை இராச்சியதிற்கும் சீதாவாக்கை இராச்சியதிற்கும் கருத்து வேறுபாடு தோன்றியதற்கான காரணத்தை குறிப்பிடுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. புவனேகபாகு தனக்கு பின்னர் தனது பேரனான தர்மபாலனுக்கு கோட்டை இராச்சியத்தை உரிமையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமையும் மாயாதுன்னை அதற்கு எதிராக இருந்தமையுமே முக்கியமான காரணம் ஆகும்.

**13. "மாயாதுன்னையின் அச்சுறுத்தல் காரணமாக புவனேகபாகு போர்த்துக்கேயர் உதவியை நாடிய போதிலும் போர்த்துக்கேயருக்கு சாதகமாக இருக்கவில்லை" காரணம் தருக.**

➢. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தின் வர்த்தகப் பொருட்களை குறைந்த விலையில் வாங்கியமை.

➢. மக்களுக்கு அவர்களால் இழைக்கப்பட்ட அநீதியான செயல்கள்.

**14. 7ம் புவனேகபாகு தர்மபாலனை எவ்வாறு கோட்டை மன்னனாக போர்த்துக்கேயரால் ஏற்றுக்கொள்ளச் செய்தான்?**

➢. தான் உயிருடன் இருக்கும்போதே தர்மபால இளவரசனின் தங்கச்சிலையை போர்த்துக் கேயருக்கு அனுப்பி அந்நாட்டு அரசன் மூலம் அதற்கு முடிசூட்டுவித்தான். இதன் மூலம் எதிர்கால மன்னாக தர்மபாலன் ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

**15. தர்மபாலன் எப்போது கோட்டை மன்னன் ஆனான்?**

➢. 1551ம் ஆண்டு போர்த்துக்கேய படைவீரன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டினால் புவனேகபாகு இறந்ததைத் தொடர்ந்து தர்மபாலன் கோட்டை ஆட்சியாளன் ஆனான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **தர்மபாலனின் செயற்பாடுகள் பற்றி எழுதுக.**

- ➢. 1557ல் தர்மபாலன் கத்தோலிக்க மதத்தைத் தழுவி தொன்யுவான் தர்மபாலன் என்ற பெயரைச் சூடிக்கொண்டான்.
- ➢. 1565க்குப் பின்னர் தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகச் செயற்பட்டான்.
- ➢. 1580ல் தர்மபாலன் மரணசாசனம் மூலம் கோட்டை இராச்சியத்தைப் போர்த்துக்கேயருக்கு உரிமையாக்கினான்.
- ➢. 1597ல் தர்மபாலன் வாரிசின்றி இறந்தமையால் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் வசமானது.

17. **கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படுவதற்குச் சாதகமாக அமைந்தகாரணிகள் எவை?**

- ➢. இலங்கை ஒரு குடையின் கீழ் காணப்படாது பல ஆட்சிப்பிரிவுகளாகக் காணப்பட்டமை.
- ➢. மன்னர்களிடையே இருந்த உட்பூசல்கள்.
- ➢. உட்பூசல்கள் காரணமாக போர்த்துகேயரின் உதவியை நாடியமை.
- ➢. தர்மபாலன் கத்தோலிக்க மதத்தை தழுவியமையும் , போர்த்துக்கேய அதிகாரத் திற்குட்பட்ட கைபொம்மையாக மாறியமையும்
- ➢. 1580ல் தர்மபாலனின் மரணசாசனம்.

18. **1594ல் தந்துரே போரில் இறந்த போர்த்துகேயத் தளபதியின் பெயரினை குறிப்பிடுக.**

- ➢. பெட்ரோ லோபஸ் டி சூஸா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

19. பெட்ரோ லோபஸ் டி சூஸாவிற்கு பின் அவனது பதவிக்கு நியமிக்கப்பட்டவன் யார்?

- ➢. தொன் ஜெரனிமோ டி அஸவேது

20. மல்வானை உடன்படிக்கை பற்றிக் குறிப்பிடுக.

- ➢. 1597ல் இடம்பெற்ற உடன்படிக்கை ஆகும்.
- ➢. தர்மபாலனின் மரணத்தின் பின்னர் கோட்டை இராச்சியத்தின் நிர்வாக அதிகாரிகளை மல்வானைக்கு அழைத்த தொன் ஜெரனிமோ டி அஸவேது அவர்களுடன் கலந்துரையாடி கோட்டை இராசதானியின் எதிர்கால நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லும் முறை பற்றி இணக்கத்துக்கு வந்தான். இதுவே மல்வானை உடன்படிக்கை எனப்படும்.

21. மாயாதுன்னையின் அரசியல் நடவடிக்கைகளைத் தருக.

- ➢. 6ம் விஜயபாகுவின் மகனான இவன் 1521ம் ஆண்டு முதல் 1581ம் வரை சீதாவாக்கை இராசதானியை ஆண்டான்.
- ➢. இவன் தொடர்ச்சியாகவே போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு வந்தான்.
- ➢. கள்ளிக்கோட்டை சமோரின் உதவியையும் பெற்றான்.
- ➢. றைகமபண்டார இறந்ததும் அவனது இராச்சியத்தையும் சீதாவாக்கை இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.
- ➢. தர்மபாலன் கத்தோலிக்க மதத்தை தழுவியதும் கோட்டை இராச்சியத்தில் இருந்த தந்த தாதுவை சீதாவாக்கைக்கு எடுத்துச் சென்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. தந்ததாதுவைப் பாதுகாத்தமையால் கோட்டை இராச்சியத்தின் பௌத்த மக்களது ஆதாரவையும் பெற்றுக் கொண்டான்.

22. முதலாம் இராஜசிங்கன் சீதாவாக்கை இராசதானியின் எழுச்சிக்கு எவ்வாறு பங்காற்றினான்?

➢. 1581ல் மாயாதுன்னையின் மரணத்திற்குப் பின் மன்னனானான்.

➢. இளமைப் பருவத்திலேயே தந்தையின் போர் நடவடிக்கைகளில் பங்கு பற்றினான்.

➢. சீதாவாக்கை இராச்சியத்தின் அதிகாரத்தை பரவலடையச் செய்தான்.

➢. 1562ல் போர்த்துக்கேயருக்கு எதிரான முல்லேரியா யுத்தத்தில் பெரும் வெற்றியீட்டினான்.

➢. 1582ல் கரலியத்த பண்டாரவைத் தோற்கடித்து கண்டி இராச்சியத்தையும் சீதாவாக்கையுடன் இணைத்தான்.

➢. போர்த்துக்கேயரின் கொழும்புக் கோட்டையை இரண்டு தடவை ஆக்கிரமித்து இந்நாட்டிலிருந்து துரத்த முயன்றான்.

➢. இம்மன்னன் காலத்தில் சீதாவாக்கை இராச்சியத்தின் அதிகாரம் உயர்நிலையில் இருந்தது.

23. சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கான காரணிகளைத் தருக.

➢. மாயாதுன்னையினதும் முதலாம் இராஜசிங்கனினதும் வீரம்.

➢. தந்தையும் மகனும் சிறந்த போர்வீரர்களாக இருந்தனர். கோட்டை இராச்சியத்துடனும் போர்த்துக்கேயருடனும் போர் செய்து தமது எல்லைகளை விரிவுபடுத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. தந்ததாது சீதாவாக்கைக்கு கொண்டு செல்லப்பட்டமை.

➢. தந்ததாதுவுக்கு உரிய ஆட்சியாளன் நாட்டின் உரிமையுடைய அரசன் என ஏற்றுக் கொள்ளப்பட்டதால் பௌத்தபிக்குகள் உட்பட பௌத்த மக்களின் ஒத்துழைப்பு சீதாவாக்கைக்கு கிடைத்தது.

➢. சீதாவாக்கை மன்னர்கள் பின்பற்றிய போர்த்துகேய எதிர்ப்புக் கொள்கை.

➢. போர்த்துக்கேயரால் துன்புறுத்தப்பட்ட கரையோரப்பிரதேச மக்களும் முஸ்லிம்களும் சீதாவாக்கைக்கு ஆதரவு வழங்கியமை.

➢. றைகம இராச்சியமும் கண்டி இராச்சியமும் சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை.

➢. கோட்டை இராச்சியத்தின் வீழ்ச்சி.

➢. தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைபொம்மை ஆனமை.

➢. 1565ல் கொழும்பு தவிர்ந்த ஏனைய பகுதிகள் சீதாவாக்கையுடன் இணைக்கப்பட்டமை.

**24. சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணிகளை தருக.**

➢. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட போர்கள்.

➢. முதலாம் இராஜசிங்கனின் பௌத்த எதிர்ப்பு நடவடிக்கைகள்.

➢. போரின் காரணமாக பொருளாதாரம் நலிவு உற்றமை.

➢. கண்டி இராச்சியத்தை சீதாவாக்கையுடன் இணைக்க உதவிய வீரசுந்தர பண்டாரவைக் கொன்றமை.

➢. இராஜசிங்க மன்னனுக்கு பின் உரிமையுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளன் இல்லாமை.

➢. முதலாம் விமலதர்ம சூரியன் தலைமையில் கண்டி இராச்சியம் எழுச்சி பெற்றமை.

**25. முதலாம் இராஜசிங்கன் எவ்வாறு இறந்தான் என எழுதுக.**

➢. விமலதர்ம சூரியனுடன் செய்த போரில் தோற்கடிக்கப்பட்டு சீதாவாக்கையை நோக்கி வருகையில் பெத்தங்கொட பூங்காவில் வைத்துக் காலில் முள் குத்தியதால் ஏற்பட்ட காயங்காரணமாக உயிரிழந்தான்.

**26. "கீழைத்தேசத்தில் போர்த்துக்கேயர் அடைந்த பெரும் தோல்வி முல்லேரியா போரிலாகும்" விளக்குக.**

➢. 1562ம் ஆண்டு இடம்பெற்றது.

➢. சீதாவாக்கைப் படைக்கு மாயாதுன்னையின் மகனான டிக்கிரி பண்டார (முதலாம் இராஜசிங்கன்) தலைமையில் இடம்பெற்றது.

➢. போர்த்துக்கேயப் படையுடன் இணைந்த தர்மபாலனின் படையினருக்கு எதிராக இடம்பெற்றது.

➢. முல்லேரியா என்ற இடத்தில் இரு தரப்பு படையினரும் சந்தித்ததால் அங்கு கடும் போர் மூண்டது. அதன்காரணமாக இப்போர் முல்லேரியாப் போர் என அழைக்கப்பட்டது.

➢. சீதாவாக்கை படையினர் மிகவும் திறமையுடனும் உபாயங்களுடனும் போர்த்துக்கேயரைச் சுற்றி வளைத்துத் தாக்கிப் போர்த்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. போர்த்துக்கேயரில் 1600 பேர் மரணமடைந்ததாக ராஜாவலியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

27. **போர்த்துக்கேயரிடம் கண்டி அரசர்கள் உதவி கோரிச் சென்றமையே கண்டி இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தும் காரணிகளாயின. அவற்றை குறிப்பிடுக.**

➢. சீதாவாக்கை கோட்டை மன்னர்களால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக கண்டி மன்னர்கள் போர்த்துகேயரின் உதவியைப் பெற முனைந்தமை.

➢. 1546ல் மாயாதுன்னை கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த போது கண்டி மன்னன் ஜயவீர போர்த்துக்கேயரின் உதவியை நாடினான்.

➢. ஜயவீர மன்னனுக்குப் பின்னர் கண்டி இராச்சியத்தின் ஆட்சிக்கு வந்த கரலியத்த பண்டார போர்த்துக்கேயருடன் தொடர்பை ஏற்படுத்தி பாதுகாப்புப் பெற முயன்றான்.

➢. இராஜசிங்கனின் தந்திரத்தால் வீரசுந்தரபண்டார கொலை செய்யப்பட்டதால் அவனது மகன் கோணப்பு பண்டார பாதுகாப்புக் கோரி போர்த்துக்கேயரை தஞ்சம் அடைந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. போர்த்துக்கேயர் கண்டி மீது படையெடுத்து தோல்வியடைந்த நான்கு யுத்தங்கள் பற்றிய விபர அட்டவணை ஒன்றினைத் தருக.

| வருடம் | வெற்றிபெற்ற கண்டி அரசர்கள் | தோல்வியடைந்த இடம் | போர்த்துக்கேயபடையை நடாத்திச் சென்றவர். |
|---|---|---|---|
| 1594 | 1ம் விமலதர்மசூரியன் | தந்துரே | பேரேரா லோப்பஸ் டி சூசா |
| 1602 | 1ம் விமலதர்மசூரியன் | பலன | தோன் ஜெரனிமோ அசவேது |
| 1630 | செனரத் 2ம் இராஜசிங்கன் (மோதாட்டத்தியவர் ) | ரந்தெனிவெல | கொன்ஸ்ரன்ரைன் டீ சா |
| 1638 | 2ம் இராஜசிங்கன் | கன்னொறுவ | டியோகோ டி மெலோ |

## 29. கண்டி இராச்சியம் மீது போர்த்துக்கேயர் படையெடுத்ததற்கான காரணங்களைத் தருக.

- முதலாம் விமலதர்மசூரியன் மதம் மாறியதுடன் போர்த்துக்கேயரை எதிர்த்து நின்றமை.
- டொன் கதரினாவை அரசியாக்கி கண்டி இராச்சியத்தின் ஆதிக்கம் பெற விரும்பியமை.
- 1602ம் ஆண்டு விமலதர்மசூரியன் ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. **கண்டி இராச்சியம் மீது போர்த்துக்கேயர் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை குறிப்பிடுக.**

➢. பகைவரின் ஆக்கிரமிப்பின் போது கண்டி மக்களது முழுமையான ஒத்துழைப்பு மன்னனுக்கு கிடைத்தமை.

உ_+ம் :-கண்டி அரசியாக குசுமாசனதேவியைப் பிரகடனம் செய்த போதும் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளாது 1ம் விமலதர்மசூரியனுக்கு ஒத்துழைப்பு நல்கினர்.

➢. கண்டி இராச்சிய மக்களின் போர்த்தந்திரங்களும் அரசர்களின் உபாயமும்.

உ_+ம் :- கொரில்லா முறைத் தாக்குதல். (ஆக்கிரமிப்பின் போது பாதுகாப்பான இடங்களில் மறைந்து, மீண்டும் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு தாக்குதல்)

➢. போர்த்துக்கேயரின் உதவிக்கு சென்ற கரையோர சுதேச மக்கள் கண்டியில் வைத்து அரசனுடன் இணைந்தமை.

➢. கண்டி இராச்சியத்தின் இயற்கை அமைப்பும் பௌதீகச் சூழலும் கண்டி மக்களுக்குச் சாதகமாக இருந்தமை.

31. **யாழ்ப்பாண இராச்சியம் எப்போது தோற்றம் பெற்றது?**

➢. இராசரட்டை நாகரீகம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற பரம்பரையினர் இதனைத் தோற்றுவித்து ஆட்சி செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் கோட்டை இராச்சியத்தின் கீழ் இருந்த போதிலும் பின்னர் அது சுதந்திர அரசாகியது.

32. **போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?**

➢. பரராஜசேகரன்

33. **போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் தலையீடு செய்தமைக்குரிய காரணங்களை தருக?**

➢. கத்தோலிக்க மதத்தைப் பரப்பமுயன்றதால், சங்கிலி மன்னன் அதனை எதிர்த்தமை.

➢. யாழ்ப்பாண அரசர்கள் சிலர் கண்டி அரசர்களுடனும் இந்தியாவுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியமை.

➢. சங்கிலி மன்னனின் பின் அரசுரிமைக் குழப்பம் காரணமாக சில மன்னர்கள் போர்த்துகேயரின் உதவியை நாடியமை.

34. **போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியம் மீது மேற்கொண்ட படையெடுப்புக்களையும், முடிவுகளையும் தருக.**

➢. 1543ல் மாட்டின் அல்பொன்த த சொய்ஸா தலைமையில் படையெடுப்பு.

◈ சங்கிலி மன்னன் திறை செலுத்தவும் கிறிஸ்தவ மதப் பிரசாரத்திற்கும் உடன்படல்.

➢. 1560ல் கொன்ஸ்தன்ரைன் த பிரகன்சா தலைமையில் படையெடுப்பு நிகழ்ந்தது.

◈ சங்கிலி மன்னனுடன் உடன்படிக்கை ஏற்படல்,

◈ மன்னார் கோட்டை அமைக்கப்பட்டது.

➢. 1591ல் பூர்த்தடோ டி மொண்டகோ தலைமையில் படையெடுப்பு நிகழ்ந்தது.

◈ புவிராசபண்டாரன் மன்னன் கொல்லப்பட்டான்.

◈ 1591ல் நல்லூர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. 1619ல் பிலிப் த ஒலிவெரா தலைமையில் படையெடுத்து யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்பட்டது.

➢. 1621ல் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சி யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரம்பமானது.

**35. போர்த்துக்கேயர் முதன்முதல் தொடர்பினை ஏற்படுத்தியபோது கோட்டை இராச்சியம் நான்கு திசாவளிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அவை எவை?**

◈ ஏழுகோறளை ◈ மாத்தறை

◈ துபரகமுவ ◈ நான்கு கோறளை

**36. போர்த்துக்கேயர் மரபுரீதியான நிர்வாகத்திற்க்கு அமைய வகுக்கப்பட்ட நிர்வாகப் பிரிவுகளைத் தருக.**

| | | |
|---|---|---|
| திசாவளி | - | திசாவை |
| கோறளை | - | கோறளை விதானை |
| பற்று | - | அத்து கோறளை |
| கிராமம் | - | கிராமத்தலைவன் |

**37. போர்த்துக்கேயர் ஆட்சியின் சிறப்பம்சங்களைத் தருக.**

➢. உயர் ஆட்சி அதிகாரம் போர்த்துக்கேய மன்னனுக்கு உரித்தானது.

➢. போர்த்துக்கேயருக்கு உரிய பிரதேசங்களை நிர்வகிக்கும் மத்தியநிலையம் இந்தியாவில் கோவாவில் இருந்தது.

➢. போர்த்துக்கல் மன்னனால் நியமிக்கப்பட்ட இராசப்பிரதிநிதி அல்லது விசுகர் என்பவர் கோவாவில் மத்தியநிலையத்தில் செயலாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. இந்நாட்டில் போர்த்துக்கேய அதிகாரிகளின் தலைவன் கப்டன் ஜெனரல் ஆவார்.
➢. கப்டன் ஜெனரல் போர்த்துக்கேய மன்னனால் நியமிக்கப்பட்டான்.
➢. கப்டன் ஜெனரலுக்கு உதவும் பொருட்டு ஆலோசனைச் சபையும் இருந்தது.
➢. இந்நாட்டில் போர்த்துக்கேயருக்கு உரிய பிரதேசத்தில் செயற்படும் அதிகாரம் கப்டன் ஜெனரலுக்கு வழுங்கப்பட்டது.

**38. போர்த்துக்கேயரின் பொருளாதார நடவடிக்கைகளை எழுதுக.**

➢. வர்த்தகத்தின் மூலமும், குடியேற்ற நாடுகளின் செயற்பாடுகளின் மூலமும் உச்ச இலாபத்தை பெற்றுக்கொள்ளுதல்.
➢. போர்த்துக்கேயரின் பொருளாதாரப் பிரிவு விடோர் த பெசன்டா எனும் அதிகாரியின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டது.
➢. பொருளாதார ஏற்பாடுகள் முக்கிய 2 பிரிவுகளாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.
  ◊ வருமானத்தை சேகரித்தல்
  ◊ வர்த்தகப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்.
➢. வருமான வரிகள் தொடர்பான தகவல்கள், நிலம் தொடர்பான பதிவுகளை எழுதி வைத்திருந்தனர்.அப்பதிவுகள் "தோம்பு" எனப்பட்டது.
➢. கறுவா வர்த்தகத்தில் ஈடுப்பட்டனர்.
➢. இதற்கென தனியான திணைக்களம் நிறுவப்பட்டது. இது மகாபத்தே திணைக்களம் எனப்பட்டது.
➢. மகாபத்தே கப்டன் இத்திணைக்களத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராவார்.

➢. பாக்கு, மிளகு, முத்து, மாணிக்கம், யானை என்பவற்றின் ஏற்றுமதியின் மூலம் நல்ல வருவாய்களை பெற்றனர்.

யானை முத்து இரத்தினக்கல் என்பவற்றின் உரிமை சுதேசமக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இருக்கவில்லை.

**39. வருமானம் சேகரிக்கும் பொருட்டு போர்த்துக்கேயரால் நியமிக்கப்பட்ட சிறிய அதிகாரிகளைப் பெயரிடுக.**

➢. கணக்குப்பிள்ளை ➢. எழுதுவினைஞர்

➢. மயோராஸ

**40. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மதப்பரப்பாளர்களை (மிசனரிமார்கள்) குறிப்பிடுக.**

➢. பிரான்சிஸ்கன் சபை (முதலில் வந்த சபை)

➢. அகஸ்தீன் சபை

➢. டொமினிக்கள் சபை

➢. இயேசு சபை

**41. மிசனரிமார்கள் சமய நடவடிக்கைகளில் ஈடுபடும்போது எப்பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர்.**

➢. பிரான்சிஸ்கள் சபை - மாத்தறை

➢. அகஸ்தீன் சபை - நான்குகோறளை

➢. டொமினிக்கள் சபை- ஏழுகோறளை

➢. இயேசு சபை - சப்ரகமுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42. கத்தோலிக்க மதத்தை தழுவுபவர்களுக்கு அளிக்கப்பட்ட விசேட சலுகைகளைத் தருக.**

- ➢. அரசாங்க பதவிகள், கொடுப்பனவுகள் வழங்கியமை.
- ➢. வரிகளிலிருந்து விடுப்பு வழங்குதல்.
- ➢. உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குதல்.

**43. கத்தோலிக்க மதப்பிரசாரம் வெற்றி பெற்றமைக்கான காரணங்களைத் தருக.**

- ➢. கிராம மக்களுடன் நட்புறவுடன் செயற்பட்டு அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றனர்.
- ➢. நோய்களினால் துன்புற்ற மக்களுக்கு மேல்நாட்டு முறைப்படி சிகிச்சை அளித்ததுடன் அவர்களை பராமரிக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.
- ➢. வைத்தியசாலையை நிறுவினர். (1552ல் ஸ்பிரிடன் எனும் வைத்தியசாலை நிறுவப்பட்டது)
- ➢. வறியவர்களைப் பராமரித்தல், அநாதைகளுக்குக் கற்பித்தல், இறந்தோரை அடக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு மடங்கள் அமைக்கப்பட்டன.(கொழும்பு, காலி,மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் நிறுவப்பட்டன)
- ➢. தேவாலயங்களுக்கு அருகில் பாடசாலைகள் இயங்கின. அவை பங்குப் (பரிஷ்) பாடசாலைகள் எனப்பட்டன.
- ➢. கத்தோலிக்க மத விழாக்களை மனங்கவரும் வண்ணம் நடாத்தியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. **போர்த்துக்கேயரால் இந்நாட்டின் பண்பாட்டில் இணைந்த புதிய அம்சங்களைத் தருக.**

- **போர்த்துக்கேய பெயர்கள் -**
  கெத்தரின், ஜோன், சில்வா, பெரேரா, மெண்டிஸ், அல்மேதா.
- **போர்த்துக்கேய சொற்கள்**
  அலுமாரி, கதிரை, மேசை, பீங்கான், லாந்தர், கோப்பை, யன்னல், விறாந்தை, சாவி, கடதாசி.
- **போர்த்துக்கேயர் அறிமுகம் செய்த உணவுகள்**
  பாண், வைன், சலாது, அச்சாறு, பற்றீஸ், ஊறுக்காய், தக்காளி, அன்னாசி, சாராயம், முந்திரிகை.
- **போர்த்துக்கேய ஆடைகள்**
  கமிசு, கலிசான், பாவாடை, தொப்பி, கவுன்
- **போர்த்துக்கேய கலைகள்**
  கட்டிடங்கள், சித்திரம்
- **போர்த்துக்கேய இசை**
  பைலா, கப்பிரிஞ்ஞா சங்கீதத்தை அறிமுகம் செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு:1

## கணிப்பீட்டுப் பயிற்சிகள்

**01.பொருத்தமான விடையின்கீழ்க் கோடிடுக.**

(01)அநுராதபுரத்தின் இலங்கையின் முதலாவது தலைநகரமாக தெரிவு செய்த மன்னன்.

(1) தேவநம்பிய தீசன் (2) விஜயன்

(3) பண்டகாபயன் (4) 2 ம் சேனன்

(02)இந்தியாவில் இருந்து வந்த குழுக்கள் இலங்கையில் எப்பிரதேசங்களில் குடியேற்றங்களை அமைத்தனர்?

(1) உலர்வலயம்

(2) கரையோரச்சமவெளி

(3) மலைப்பிரதேசம்

(4) ஈரவலயம்

(03)அநுராதபுரத்தில் பாரிய குளங்களைக் கட்டும் பணிகளை ஆரம்பித்த மன்னன்

(1) மகாசேனன் (2) தாதுசேனன்

(3) வசபன் (4) 1ம் பராக்கிரமபாகு

(04)புராதன அபாயவாவி இன்று எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?

(1) கட்டுக்கரைக் குளம் (2) பசவக்குளம்

(3) காமினிவாவி (4) கலாவாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05)பராக்கிரமபாகுவின் நீர்ப்பாசனப் பணியை அறிய உதவும் இலக்கிய மூலாதாரம் எது?

(1) மகாவம்சடீகாவ (2) சூளவம்சம்

(3) தீபவம்சம் (4) மகாவம்சம்

(06)கலாவாவியில் இருந்து அநுராதபுரத்தின் திஸாவாவிற்கு நீரைக் கொண்டு செல்வதற்காக தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட கால்வாய்

(1) எலகர கால்வாய்

(2) அங்கமடில்லகால்வாய்

(3) ஜயகங்கை கால்வாய்

(4) மினிப்பே கால்வாய்

(07)நீராடுவதற்கும் நீர் விளையாட்டில் ஈடுபடுவதற்காகவும் பயன்படுத்தப்பட்ட பொய்கை

(1) ரன்மசுப் பூங்காவின் பொய்கை

(2) அபயகிரி யானைப் பொய்கை

(3) பொலன்னறுவைத் தாமரைப் பொய்கை

(4) அநுராதபுர குட்டம் பொய்கை

(08) குளக்கட்டு நீரலைகளால் அரிப்பெடுக்காமல் பாதுகாப்பது எது?

(1) கலிங்கல் (2) அலைதாங்கி

(3) குளக்கட்டு (4) வான்கதவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(09) "உயன் வெஜரும்" அழைக்கப்பட்டவர்கள்

(1) குளக்கட்டை பராமரித்துப் பேணுபவர்கள்

(2) பூங்காக்களின் அழகைப் பராமரிப்பவர்கள்

(3) சிகிரியா நீர்ப்பூங்கா நிர்வாகிகள்

(4) மகா மேகவனப் பூங்கா நிர்வாகிகள்

(10) இலங்கையில் செங்கற் பாவனை ஆரம்பித்த காலப்பகுதி எது?

(1) கி.மு 3ம் நூற்றாண்டு

(2) கி.மு 1ம் நூற்றாண்டு

(3) கி.மு 5ம் நூற்றாண்டு

(4) கி.மு 2ம் நூற்றாண்டு

(11) "பத்மஸ்வர" எனும் பெயரில் பூங்காவை அமைத்த மன்னர் யார்?

(1) அபயன்

(2) 1ம் அக்போ

(3) குட்டகண்ணதிஸ்ஸ மன்னர்

(4) மூத்தசிவன்

(12) இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது தாதுகோபம்

(1) அபயகிரி (2) ருவன்வெலிசாய

(3) ஜேதவனராமய (4) தூபாராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13) இராசரட்டை காலத்திற்குரிய கலைத்திறனான தூபி அமைந்துள்ள இடம்

(1) மெதிகிரிய (2) நில்லக்கம

(3) தொலுவில (4) வெஸ்ஸகிரி

(14) பொலன்னறுவையில் மூன்று நிலைகளிலும் அமைந்த புத்தர் சிலை உள்ள இடம்

(1) மாளிகாவில (2) கல்விகாரை

(3) ரெஸ்வெஹர (4) தொலுவில

(15) பொலன்னறுவைக் காலத்தில் சந்திர வட்டக் கல்லிருந்து நீக்கப்பட்ட உருவம் எது?

(1) எருது (2) தாமரை

(3) தீப்பிழம்பு (4) யானை

(16)சிகிரியா நீர்ப்பூங்கா அமைக்கப்பட்ட காலம்

(1) கி.பி 2ம் நூற்றாண்டு

(2) கி.பி 5ம் நூற்றாண்டு

(3) கி.பி 3ம் நூற்றாண்டு

(4) கி.பி 4ம் நூற்றாண்டு

(17)இலங்கைத் தொழினுட்பவியலாளருக்கே உரித்தான அவர்களின் திறனைக் காட்டும் குளக்கூறு.

(1) குளக்கட்டு (2) கலிங்கல் தொட்டி

(3) வான்கதவு (4) கலிங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18)கெடிகே மரபு ரீதியான சிலைமனைகளுள் ஒன்றாக விளங்குவது.

(1) லங்காதிலக சிலைமனை

(2) பங்குலிய சிலைமனை

(3) தொலுவில சிலைமனை

(4) விஜயராம சிலைமனை

(19) பலாங்கொடை சமனெலவெவ என்பது

(1) எமது நாட்டில் இரும்பு உருக்கப்பட்டமை தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற இடம்

(2) வரலாற்றுக்கு முற்பட்ட கால மயானத் தொகுதிகள் கிடைக்கப் பெற்ற இடம்.

(3) புராதன காலத்தில் ஓடுகள் செய்யப் பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்த இடம்

(4) உலோகப் பாவனை தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற இடம்

(20) "இலங்கையின் புராதன நீர்ப்பாசனம்" எனும் அபூர்வ நூலை எழுதிய வரலாற்று ஆசிரியர்

(1) E.H.கார் (2) எச்.சி.பி.பெல்

(3) R.L.புரோஹியர் (4) செனரத்பரணவிதான

**02. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.**

(01)ஜயகங்கை கால்வாய் (யோதகால்வாய்) ..................மன்னால் அமைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02)லென்விகாரை .................... மரபு ரீதியான குகை விகாரைகளுக்கு உதாரணங்களாகும்.

(03)வெள்ளரசு மரத்தின் பாதுகாப்பிற்கும் அலங்காரத்திற்குமாக அமைக்கப்பட்ட கட்டடம் ............. எனப்படும்.

(04)அநுராதபுர யுகத்தில் ..........,.......... ஆகிய இடங்களில்நிற்கும் புத்தர் சிலை காணப்படுகிறது.

(05)செங்கல் ஓடுகளை உற்பத்தி செய்வோர் .................. என அழைக்கப்பட்டனர்.

(06)மகாவம்சத்தில் 163 குளங்கள் நிர்மாணித்ததாக .............. மன்னன் குறிப்பிடப்படுகின்றான்.

(07) ................ மன்னனால் மினிப்பே கால்வாய் அமைக்கப்பட்டது.

(08)இலங்கையின் எழுத்து மூலமான வரலாறு ........................ ஆண்டுக்கு பழமை வாய்ந்தது.

(09)................அநுராதபுரக் காலத்திற்குரிய உயர் தூரத்திலான போதிசத்துவர் சிலை ஆகும்.

(10)முதலாம் உபதிஸ்ஸமன்னனால் அமைக்கப்பட்ட பிரசவ விடுதியை ...................... எனவும் அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03.** பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

(01) வசபன் சுரங்க வழி நீர்ப்பாசனத்தை ஆரம்பித்த மன்னன் ஆவான். ( )

(02) தாதுசேனன் கலாவாவி பாதுலகவாவி ஆகிய குளங்களை அமைத்த பெருமைக்குரியவன் ( )

(03) கல்விகாரை, தம்புள்ள என்பவற்றிலுள்ள சிலை வடிவங்கள் அமர்ந்த தியான வடிவத்திலுள்ள சிலைகளுக்கு எடுத்துக்காட்டாகும். ( )

(04) வெளிவான் கதவு மழைக்காலத்தில் குளத்தில் சேரும் மேலதிக நீரை வெளியேற்ற உதவும். ( )

(05) சங்கமித்தையின் வருகையுடன் எட்டுக் குயவர்கள் வந்ததாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்படுகிறது. ( )

(06) அபயகிரியில் யானைப் பொய்கை அமைக்கப்பட்டதன் நோக்கம் யானைகளைக் குளிப்பாட்டுவதற்காகும் ( )

(07) கல்வெட்டுகளில் செப்புக்கம்மாளர், தகரக்கம்மாளர் ஆகியோர் முறையே தம்பர, தோடஸ என அழைக்கப்பட்டனர் ( )

(08) இராசரட்டை காலத்திற்குரிய மிகச் சிறந்த நுழைவாயில் அமைக்கப்பட்ட இடம் மிகிந்தலை கண்டகசைத்திய ஆகும் ( )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(09)காவற்கல், கொரவக்கல் என்பன இராசரட்டைக்கால கட்டிடங்களின் கோபுரங்களை அலங்கரித்த கலையம்சங்கள் ஆகும். ( )

(10)ருவன்வெலிசாய முற்றத்தில் காணப்படும் சிலை பாதிகாபயன் சிலையாகும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

01. 1. 3 2. 1 3. 3 4. 2 5. 2
6. 3 7. 1 8. 2 9. 3 10. 1
11. 3 12. 4 13. 1 14. 2 15. 1
16. 2 17. 2 18. 1 19. 1 20. 3

02. 1.தாதுசேனன் 2.கெடிகே
3.போதிமனை 4.அவுக்கண,மாளிகாவ
5.ஒட்டுத்தச்சர் 6.1ம் பராக்கிரமபாகு
7.1ம் அக்ரபோதி 8.2500
9.தம்பகொடசிலை 10.பஸவந்திநாமசாய

03. 1 (✓) 2. (✓) 3. (×) 4. (✓)
5. (✓) 6. (×) 7. (✓) 8. (✓)
9. (✓) 10. (✓)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு:2

## கணிப்பீட்டுப் பயிற்சிகள்

**01.பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01.கண்டி இராச்சியத்தின் முதலாவது மன்னன்.

(1). ஜோதிய இளவரசன்

(2). கரலியத்த பண்டார

(3). சேனாசம்மத விக்கிரமபாகு

(4). வீரசுந்தரபண்டார

02.டொன் கதரினாவை மணந்ததன் மூலம் புதிய அரசப்பரம்பரையைத் தோற்றுவித்த மன்னன்.

(1). 1ம் விமலதர்ம சூரியன்

(2). சௌரத்

(3).1ம் இராஜசிங்கன்

(4).2ம் இராஜசிங்கன்

03.கண்டி இராச்சியம் சுதந்திரம் இழக்கக் காரணமான உடன்படிக்கை தயாரிக்கப்பட்ட ஆண்டு

(1). 1638

(2). 1815

(3). 1691

(4). 1582



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.சரணங்கர தேரருக்கு "சங்கராஜ" பதவியை வழங்கிய மன்னன்.

(1). ஸ்ரீ விஜய இராஜசிங்கன்

(2). இராஜாதி இராஜசிங்கன்

(3). கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

(4). ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

05.கண்டி இராச்சியத்தை கைப்பற்றிய ஆளுனர் யார்?

(1) றொபர்ட் பிரவுன்றிக்

(2). பிரட்ரிக் நோத்

(3). தோமஸ் மெயிட்லன்ட்

(4). ஜோன் டொயிலி

06.தலதா மாளிகைக்கு பட்டிருப்பு எனும் அழகிய பகுதியை அமைத்த மன்னன் யார்?

(1). ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

(2). இராஜாதி இராஜசிங்கன்

(3). ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்

(4) இரண்டாம் இராஜசிங்கன்

07.கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் பௌத்த சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முன்னோடியாகக் காணப்பட்ட தேரர்

(1). வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர்

(2). மீகெட்டுவத்த குணானந்த தேரர்

(3). வலானே சித்தார்த்த தேரர்

(4). மகிந்த தேரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08.1ம் விமலதர்ம சூரியனிடம் போர்த்துக்கேயர் 1602ம் ஆண்டு தோல்வியடைந்த போர் எது?

(1). தந்துரே போர்

(2). கன்னொருவ போர்

(3). முல்லேரியாப் போர்

(4). பலனப்போர்

